'' கண்ணைக் காப்பது இமை ''
'' மண்ணைக் காப்பது மழை ''

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2014-ம் ஆண்டு ஜூலை திங்கள் 31-ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**அ) திருக்குறள் :** **“ ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்கு பொன்றுந் துணையும் புகழ்.”**

**பொருள் :** **தீங்கு செய்தவரைத் தண்டிப்பவருக்கு அன்று ஒருநாள் மட்டுமே இன்பம். ஆனால், தண்டிக்காமல் பொறுத்தவர்க்கு உலகம் அழியும் வரை புகழ் நிலைத்து நிற்கும்.**

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) <u>ம.பொ.4/ Est 1 (Inf & Aminities) / 14-15</u>**

மதுரை மாநகராட்சி எல்கைக்குட்பட்ட சிம்மக்கல் ரோடு முதல் கோரிப்பாளையம் (செல்லூர்) வரை மற்றும் ESI ஆஸ்பத்திரி அருள்தாஸ்புரம் முதல் ஆரப்பாளையம் வரை ஏற்கனவே உள்ள தரைமட்ட பாலத்தின்மீது புதிதாக உயர்மட்ட மேம்பாலங்கள் அமைக்கும் பணிக்கு நகர் ஊரமைப்புத்துறை போக்குவரத்து மேம்பாட்டுதிட்ட நிதியின்கீழ் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண் 62 நாள் 26.5.14ன்படி ரூ. 30.40 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது-

மேற்கண்ட தொகையின்படி ESI ஆஸ்பத்திரி முதல் ஆரப்பாளையம் வரை உயர்மட்ட மேம்பாலம் அமைக்க ரூ.16.17 கோடிக்கு மதிப்பீடு மற்றும், சிம்மக்கல் ரோடு முதல் கோரிப்பாளையம் (செல்லூர்) வரை உயர்மட்ட மேம்பாலம் அமைக்க ரூ.15.01 கோடிக்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறை ஆணை எண் 17906/2014/Doi நாள் 8.7.14ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட விபரப்படி நிர்வாக ஒப்புதல் மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட விபரத்தையும், உரியமுறையில் ஒப்பந்தபுள்ளி வரவழைக்கவும், மாமன்றத்தின் தகவலுக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.645</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**2) B11/01738/2014**

மதுரை மாநகராட்சியில் பணியாற்றி ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு 2012-13ம் ஆண்டிற்கான பொங்கல் போனஸ் ரூ.500/-வீதம் வழங்க அரசாணை எண்: G.O.NO: 5, நாள் : 06.01.2014ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையின்படி வழங்கியதற்கு மாமன்ற தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.646**
**பதிவு செய்யப்பட்டது.**

**3) B11/28266/2012**

மதுரை மாநகராட்சியில் பணியாற்றி ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியதாரர்களுக்கும் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும், 01.01.2014 முதல் அகவிலைப்படி 90% லிருந்து 100% வழங்க அரசாணை எண்:100, நாள் : 09.04.2014-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதல் வேண்டியும், மேற்காணும் அரசாணைக்கு மாமன்ற ஒப்புதல் மற்றும் மாமன்ற தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.647**
**பதிவு செய்யப்பட்டது.**

**4) CW2 /21340/2013**

மதுரை மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் டபேதராக பணிபுரிந்து வரும் திரு.P.சுந்தரம், காவலர் வயது முதிர்வு காரணமாக **30.06.2013–**ஆம் தேதியன்று பிற்பகல் முதல் பணி ஓய்வு பெற்றுள்ளார். வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் டபேதார் பணியின் முக்கியத்தை கருத்தில் கொண்டும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களது 01.07.2013–ம் தேதிய கடித குறிப்பின்படியும், அரசாணை எண்.G.O.No.170, நாள் : 18.12.2009-ன்படியும், ஆணையாளர் அவர்களின் 14.06.2014ந் தேதிய உத்தரவின்படியும், 09.07.2014 மு.ப. முதல் 08.07.2015 பி.ப. வரை தற்காலிக பணி நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் டபேதராக பணியாற்றி வருவதற்கு மாமன்றத்தின் தகவலுக்கும், தொகுப்பூதிய செலவினத்தை ஏற்றுக்கொள்ளவும், மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.648**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5) H3/10196/07**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்பு பணிக்காக ஒரு மண்டலத்திற்கு தலா 15 நபர்கள் வீதம், நான்கு மண்டலத்திற்கு 60 நபர்களில் மண்டலம் எண் – 1ல் ஒரு நபரும், மண்டலம் எண் – 4ல் ஒரு நபரும் மாநகராட்சியில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மேற்கண்ட 60 நபர்களில் 2 நபர்களை நீக்கம் செய்து மீதமுள்ள 58 நபர்களும் மேலும் கூடுதலாக பதிலி பணியாளர்கள் மண்டலம் எண். **2**ல் 3 நபர்களும், மண்டலம் எண் – 3ல் 5 நபர்களும் ஆக மொத்தம் 66 நபர்களை வேலை வாய்ப்பு துறை அலுவலக பதிவு அட்டையுடன் திருவிழா காலங்களில் ஆள் எடுப்பது போல் முற்றிலும் தற்காலிகமாக தினக்கூலிகளாக 66 நபர்கள் மட்டும் பணிக்கு எடுக்கப்பட்டு பணி செய்து வருகின்றனர். தற்சமயம் இப்பணியாளர்களின் பணிக்காலம் 31.03.2014ல் முடிவடைந்து விட்டதால், பொது மக்கள் நலன் கருதியும் மீண்டும் பணியினை தொடரவும் 02.04.2014 முதல் 29.06.2014 வரை 89 நாட்களுக்கு மட்டும் பணியினை நீட்டிப்பு செய்து பணி செய்யப்பட்டு வருகின்றனர். மேற்படி பணிக்கு மாநகராட்சி பொது நிதியில் இருந்து தினக்கூலி அடிப்படையில் உரிய ஊதியம் வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.649**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6) H1/H6/22210/12**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் செயல்பட்டு வரும் மனநல மருத்துவமனையில் துப்புரவு பணியை மேற்கொள்ள **2** பணியாளர்களையும், காவல் பணியை மேற்கொள்ள **2** காவலர்களையும் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயித்த காவலர் பணிக்கு ரூ.196/- துப்புரவு ஊழியர் பணிக்கு ரூ.173/- என்ற தினக்கூலி விகிதத்தில் குவாலிட்டி சர்வீஸ் சொஸைட்டி மூலம் 03.09.2012 முதல் 02.09.2013 முடிய சப்ளை

செய்வதற்கும், அதற்கான செலவினம் ரூ.2,69,370/-ஐயும் காவலர் பணிக்கு ரூ.212/- துப்புரவு ஊழியர் பணிக்கு ரூ.221/- என்ற தினக்கூலி விகிதத்தில் 03.09.2013 முதல் 30.06.2014 முடிய சப்ளை செய்வதற்கான செலவினம் ரூ.2,60,666/-ஐயும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பினையும், 01.07.2014 முதல் 30.09.2014 முடிய காவலர் பணிக்கு ரூ.271/- மற்றும் துப்புரவு பணிக்கு ரூ.240/- என்ற தினக்கூலி அடிப்படையில் சப்ளை செய்யவும் அதற்கான செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.650**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7) H6/22873/13**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அரசு ஆணையின்படி திறக்கப்பட்ட கீழ்க்கண்ட 11 அம்மா உணவகங்களில் அவசர அவசியம் கருதி காலை, மாலை இரு வேளைகளிலும் துப்புரவு பணி மற்றும் காவலர் பணி செய்திட ஒரு உணவகத்திற்கு துப்புரவு பணியாளர் ஒருவர் மற்றும் காவலர் இருவர் என்ற அடிப்படையில் 15.07.2013 முதல் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்த தினக்கூலி முறையே ரூ.221/- மற்றும் ரூ.212/- பெற்றுக் கொள்ள குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியதற்கும், மேற்படி ஒப்பந்த பணியாளர்களான துப்புரவு ஊழியர்கள் மற்றும் காவலர்கள் முறையே ஊதியம் ரூ.7,57,146/- மற்றும் ரூ.8,42,438/-ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பை கோருவதுடன், மேற்படி உணவகத்திற்கு துப்புரவு பணியாளர்களை சப்ளை செய்து வரும் குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி நிறுவனத்தின் சப்ளை உத்தரவு 31.07.2014 உடன் முடிவடைவதால் 01.08.2014 முதல் 30.09.2014 வரை சப்ளை செய்யவும் மற்றும் தொடர்ந்து 11 காவலர்களை மட்டும் 01.07.2014 முதல் 30.09.2014 வரை சப்ளை செய்யவும் அதற்கான செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| வ. எண் | உணவகங்களின் விபரம் | பணியாளர் களின் விபரம் | எண்ணிக்கை | பணியாளர் களின் விபரம் | எண்ணிக்கை | 01.07.14 முதல் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆனையூர், வார்டு எண். 2 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 2 | 1 |
| 2 | தேன்மொழி கல்யாண மண்டபம், வார்டு எண். 10 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 2 | 1 |
| 3 | புதூர் மருத்துவமனை கட்டிட வளாகம், வார்டு எண். 45 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 2 | 1 |
| 4 | காந்திபுரம், வார்டு எண். 46 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 2 | 1 |
| 5 | ராமராயர் மண்டபம், வார்டு எண். 35 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 2 | 1 |
| 6 | புதுராம்நாட் ரோடு, வார்டு எண். 54 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 2 | 1 |
| 7 | C.M.R. ரோடு, வார்டு எண். 71 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 2 | 1 |
| 8 | மேலவாசல், வார்டு எண். 78 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 2 | 1 |
| 9 | திருப்பரங்குன்றம், வார்டு எண். 96 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 2 | 1 |
| 10 | பழங்காநத்தம், வார்டு எண். 76 | துப்புரவு பணியாளர்கள் | 1 | காவலர்கள் | 2 | 1 |
| 11. | அரசு இராஜாஜி மருத்துவமனை, வார்டு எண். 36 (13.02.14) | துப்புரவு பணியாளர்கள் | 2 | காவலர்கள் | 3 | 1 |
| | | **மொத்தம்** | **12** | **மொத்தம்** | **23** | **11** |

**மாமன்றத்தீர்மானம் எண்.651**
**பின்னேற்பு குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) A3/014137/14**

மதுரை மாநகராட்சி கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் 65 பள்ளிகளுக்குத் தேவையான 53 காவலர்கள் அம்மா செக்யூரிட்டி சர்வீஸ் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். எனவே, 53 காவலர்கள் 01.04.2014 முதல் 31.03.2015 முடிய ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிநீட்டிப்பு செய்வதற்கும், நிபந்தனைகளுக்குட்பட்டு நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.212/-வீதத்தில் 53 காவலர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு திருவாளர்கள். அம்மா செக்யூரிட்டி சர்வீஸ் நிறுவனத்தின் மூலம் பள்ளிகளுக்கு காவலர்களை வழங்குவதற்கும் மாமன்றத்தில் ஒப்புதல் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.652**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9) H3/027867/12**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மாநகராட்சி நான்கு மண்டலங்களிலுள்ள அனைத்து பகுதிகளிலும் டெங்கு காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்கும் சிறப்பு பணிக்கு தேவையான புகைபரப்பும் இயந்திரங்கள் (நடுத்தரம்) 2012 - 13ம் ஆண்டிற்கு 24 எண்ணம் ரூ.16,32,000/-க்கு கொள்முதல் செய்யப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது மேலும் மாநகராட்சி நான்கு மண்டலங்களிலுள்ள அனைத்து பகுதிகளிலும் கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்கும் சிறப்பு பணிக்காக மண்டலம் ஒன்றிற்கு ஆறு எண்ணம் வீதம் 24 புகைப்பரப்பும் இயந்திரங்கள் (நடுத்தரம் 5 லிட்டர்) கொள்முதல் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.653**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10) ம.பொ.4/ 003493 / 14**

மதுரை மாநகராட்சி மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலைய பராமரிப்பு பணிகளில் அசம்பாவிதம் நடைபெறாமல் முழுமையாக இரவு பகல் கண்ணாணித்து பாதுகாப்பு பணி மேற்கொள்ள தமிழ்நாடு முன்னாள் ராணுவத்தினர் கழகம் சென்னை நிறுவனத்திற்கு சப்ளை உத்தரவு வழங்கப்பட்டதற்கு மாமன்ற தீர்மானம் எண் 536 நாள் 21.11.13ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட தீர்மானத்தில் பணியின் காலஅவகாசம் குறிப்பிடப்படாமல் உள்ளதால் சப்ளை உத்தரவு காலம் 16.11.12 முதல் 31.3.14 முடிய பணிபுரிந்த காலத்திற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலையும் 1.4.14 முதல் 31.3.15 முடிய மேலும் ஓராண்டுக்கு Texco பணியாளர்களை (12 காவலர்கள்) தொடர்ந்து பணிபுரிய அனுமதி நீடிப்பு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலையும் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.654**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11)ம.பொ. 4/ம.எண். 559/2012-2013**

மதுரை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள வார்டுப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் வகையில் முதற்கட்டமாக மாநகராட்சியின் புதிய வார்டுகள் மற்றும் பழைய வார்டு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சின்டெக்ஸ் தொட்டிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் வினியோகம் செய்வதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு கடந்த **30.08.2012** அன்று மாமன்றத்தின் (மாமன்ற தீர்மானம் எண். **246**) ஒப்புதல் பெறப்பட்டு **04.10.2012** அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு கடந்த **31.10.2012** அன்று நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் (மாமன்ற தீர்மானம் எண். **274**) ஒப்புதல் பெறப்பட்டு, M/s. ஜெய்வர்சினி டிரான்ஸ்போர்ட், சென்னை என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்தார் கடும் டீசல் விலை உயர்வால் விலை விகிதத்தினை உயர்த்தி தருமாறு கடந்த **05.03.2014** அன்று கடிதம் அளித்தனர். **04.03.2014** அன்று முதல் தேர்தல் நன்னடத்தை விதி அமுலில் இருந்ததால் ஆணையாளர் அவர்களின் ஒப்புதலை பெறப்பட்டு கீழ்கண்டவாறு விலை விகிதம் உயர்த்தி ஒப்புதல் வழங்கப்பட்டது.

| வ. எண் | விபரம் | ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதம் | தற்போது உயர்த்தி வழங்கப்பட்ட விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | மாநகராட்சியின் பழைய வார்டு பகுதிகள் (நடை ஒன்றுக்கு | 600.00 | 645.00 |
| 2. | மாநகராட்சியின் புதிய வார்டு பகுதிகள் (நடை ஒன்றுக்கு) | 715.00 | 769.00 |

மேற்கண்டவாறு ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று புதிதாக உயர்த்தி வழங்கப்பட்ட விலை விகிதத்திற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.655**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**12)ம.பொ. 5/19229/2013**

மதுரை மாநகராட்சி, மைய பொறியியல் பிரிவில் பணிபுரியும் இளநிலை மற்றும் உதவி பொறியாளர்களுக்கு தங்களுக்குட்பட்ட வார்டு பகுதிகளில் அவ்வப்போது பாதாளச் சாக்கடை மற்றும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் நீக்குவதற்கும் இதர அத்தியாவசியப் அடிப்படை பணிகளை மேற்கொள்வதற்கும் அன்னார்களுக்கு கையிருப்பு முன்பணத் தொகையாக ரூ.5000/- வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் வார்டு பகுதிகளில் செயல்பட்டு வரும் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியுள்ளதால் கையிருப்பு தொகையினை விட கூடுதலாக ரூ.5000/- ஒதுக்கீடு செய்து ஆக மொத்தம் ரூ.10000/- வழங்கலாம் .

1) திரு.கே.மயிலேறிநாதன், உதவிப் பொறியாளர்
2) திரு.ஜே.சுரேஷ்குமார், உதவிப் பொறியாளர்
3) திருமதி.எஸ்.மஞ்சுளா தேவி, உதவிப் பொறியாளர்
4) திரு.ஆர்.முருகன், உதவிப் பொறியாளர்
5) திரு.கே.எஸ்.கந்தப்பா, உதவிப் பொறியாளர்
6) திரு.பி.சுப்பிரமணியன், உதவிப் பொறியாளர்
7) திரு.வி.ஆறுமுகம், உதவிப் பொறியாளர்
8) திரு.எஸ்.ஷர்புதீன், இளநிலைப் பொறியாளர்
9) திருமதி.கே.இந்திரா தேவி, இளநிலைப் பொறியாளர்
10) திரு.ஏ.அமர்தீப், உதவிப் பொறியாளர்
11) திரு.லோகேஷ் பிரபு, உதவிப் பொறியாளர்
12) திரு.எம்.வி.முருகேச பாண்டியன், இளநிலைப் பொறியாளர்
13) திருமதி.ஜே.மல்லிகா, உதவிப் பொறியாளர்
14) திருமதி.சி.துர்கா தேவி, உதவிப் பொறியாளர்
15) திரு.ஆர்.பாஸ்கரன், இளநிலைப் பொறியாளர்
16) திருமதி.பிவி.கிருஷ்ணா, உதவிப் பொறியாளர்
17) திரு.எப்.ஆரோக்கிய சேவியர், உதவிப் பொறியாளர்
18) திருமதி.ஆர்.ராஜசீலி, உதவிப் பொறியாளர்
19) திருமதி.எம்.பொன்மணி, உதவிப் பொறியாளர்
20) திரு.ஆர்.பாலையா, இளநிலைப் பொறியாளர்
21) திருமதி.ஆர்.கனி, உதவிப் பொறியாளர்
22) திரு.எம்.முனீர் அகமது, உதவிப் பொறியாளர்
23) திரு.ஆர்.சங்கிலிராஜன், உதவிப் பொறியாளர்
24) திரு.எஸ்.குழந்தைவேலு, உதவிப் பொறியாளர்
25) திரு.கே.சோணை, இளநிலைப் பொறியாளர்(பொறுப்பு)
26) திரு.எம்.ஜாகீர் உசேன், இளநிலைப் பொறியாளர்(பொறுப்பு)

மேற்கண்டவாறு இளநிலை மற்றும் உதவிப் பொறியாளர்களில் வார்டு பணிகளுக்கு செலவினம் செய்து மீளப்பெற கையிருப்பு முன் பணத்தொகை (Imprest Amount) ரூ.10,000/- யினை அந்தந்த மண்டலங்களிலே ஒதுக்கீடு செய்து வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.656**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**13)A7/019040/14**

மதுரை மாநகராட்சி நர்வாகத்தின்கீழ் 27 ஆரம்பப்பள்ளிகள் செயல்பட்டு வருகிறது. இதில் திரௌபதியம்மன் எண்.1 மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் சென்ற ஆண்டு (2013-14) 4 மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வந்தார்கள். ஆனால் இந்த கல்வியாண்டில் ஒரு மாணவன் மட்டுமே கல்வி பயிலுவதால் நிர்வாக நலன் கருதி மேற்படி மாணவனை அருகிலுள்ள மாநகராட்சி திரௌபதியம்மன் எண்.2 ஆரம்பப்பள்ளியில் சேர்க்கவும், மேற்படி பள்ளியை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு, மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.657**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**14) B4/15702/01**

மதுரை மாநகராட்சியில் ஆலோசகராக பணிபுரிந்து வரும் திரு.எஸ்.ஜெயபால் அவர்களின் ஒப்பந்தப்பணி எதிர்வரும் 31.07.2014 அன்று முடிவுபெறப்பட உள்ளதால் இவரின் பணியினை 01.08.2014 முதல் ஓர் ஆண்டிற்கு நீட்டிக்கவும்,

மேலும், திரு.எஸ்.ஜெயபால், திரு.எம்.முருகேசன் ஆலோசகர்களின் மாதாந்திர ஊதியத்தினை ரூ.20000/-லிருந்து ரூ.25000/- ஆக உயர்த்தி 01.08.2014 முதல் வழங்கிடவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் கூட்டக் குறிப்பு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.658**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**15) மதி1(ம1)/021744/14**

மதுரை மாநகராட்சி, மைய நகரமைப்பு பிரிவில் அயற்பணியில் நகரளவர்களாக பணிபுரிந்து பதவி உயர்வு மற்றும் பணிமாறுதலில் கடந்த மார்ச் **2014** சென்று விட்ட காரணத்தால் மதுரை மாநகராட்சி அன்றாட நடைபெற்று வரும் பணிகளான ஆக்கிரமிப்பு உள்ள இடங்களை அளவெடுக்கும் பணி, நீதிமன்ற வழக்குகளுக்கு குறிப்பு பெறவும், பொதுமக்கள் சர்வே ஸ்கெட் வேண்டி விண்ணப்பிக்கும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து சர்வே ஸ்கெட் தயாரிக்கும் பணி மற்றும் மதுரை மாநகராட்சி 100 வார்டுகளாக விரிவாக்கம் செய்யும் போது **17** உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டதில், மேற்படி உள்ளாட்சி அமைப்புகளில் இருந்து பெற வேண்டிய சர்வே ஆவணங்கள் மற்றும் இதர ஆவணங்கள் பெற வேண்டிய பணிகளும் நிலுவையாக உள்ளன. எனவே,ந.க.எண் தே.தெ49/அலகு/V/13/2000, நாள் 31.07.2013 என்ற எண்ணிட்ட இராமநாதபுரம் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணையில் தனி வட்டாட்சியர் நில எடுப்பு அலுவலக சார்வு ஆய்வாளர் பணியிடம் காலியாக உள்ளதில் ஓய்வு பெற்ற அரசுப்பணியாளர்களை பணிநியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளதை போல் மதுரை மாநகராட்சியின் மேற்படி பணிகளை கருத்திற் கொண்டும், நிர்வாக நலன் கருதியும் திரு.பா.ஜெயராமன்., ஓய்வு பெற்ற குறுவட்ட அளவரை ஒப்பந்த அடிப்படையில் 1வருடத்திற்கு அரசாணை(டி) எண்.1, நெடுஞ்சாலை சிறு துறைமுகங்கள் (எச்.வி1)துறை, நாள் 02.01.2013ல் தெரிவித்தப்படி தனியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.12000/- வீதம் தொகுப்பூதியமாக நிர்ணயம் செய்து நகரளவர் பணிபார்க்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.659**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**16) மதி1/12619 /13**

மதுரை மாநகராட்சி, வார்டு 16,சர்வே வார்டு V ,பிளாக் எண் 94, புல எண் 3ல் உள்ள இடம் மதுரை மாநகராட்சி என்ற பெயரில் தாக்கலாகி உள்ள மனுதாரருக்குரிய இடத்தை திரு.எஸ்.பாலாஜி த/பெ.சபாபதி பெயரில் மாற்றி தரக்கோரி மதுரை வருவாய் கோட்டாட்சியர்க்கு விண்ணப்பம் செய்துள்ளார். வருவாய் கோட்டாட்சியர் தனது ந.க.எண்.2762/2013/சி,நாள் 08.04.2013ந் தேதிய கடிதத்தில் மனுதாரர் பெயருக்கு பட்டா வழங்க ஏதுவாக மனுதாரருக்கு மாற்றி தர தடையில்லா சான்று வழங்க கேட்டுள்ளார்.

மேற்படி புலமானது மனுதாரரின் தாயாரின் திருமதி.முத்துகீதா மற்றும் அவரின் சகோதரிக்கும் தந்தை திரு.சோமசுந்தரம் பிள்ளையிடம் தானமாக பெற்று அனுபவித்து வந்த சொத்தை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் சாலை வசதிக்காக ஆர்ஜிதம் செய்த நிலம் நீங்கலாக மனுதாரரின் தாயார் மற்றும் அவருடைய சகோதரிக்கு வழங்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியை மனுதாரர் தானமாக பெற்றுள்ளார்.

மனுதாரின் இடம் (Ts No.3) சர்வே ஆவணங்களின்படி நகர அளவரின் 03.07.2013ந் தேதிய குறிப்பில் பட்டா இடம் எனவும், அரசு புறம்போக்கு எதுவும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும், இந்த இடம் ரோடு ஆணையாளர்,மதுரை மாநகராட்சி என்ற பெயரில் நகர அளவர் பணியில் எவ்வாறு மாற்றம் செய்யப்பட்டது என்ற விபரம் நகர அளவை ஆவணங்களில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மேற்படி பகுதி புது எல்லீஸ் நகர் அபிவிருத்தி திட்டத்தில் மதுரை உள்ளூர் திட்டக் குழுமத்தினரால் நில ஆர்ஜிதம் செய்து அமைக்கபட வேண்டி சாலையில் உள்ளது. மேற்படி திட்டச் சாலை மதுரை உள்ளூர் திட்டக் குழுமத்தினரால் அமைக்கப்படாமல் திட்டச்சாலை முழுவதும் கட்டிடங்கள் கட்டப்பட்ட தனியார் வசம் உள்ளது. இந்நிலையில் மனுதாரர் சர்வே ஆவணங்களில் பெயர் மாற்றம் கோரி மனுச் செய்துள்ளதால் மதுரை உள்ளூர் திட்டக் குழும அனுமதி பெற்றுத்தான் கட்டிடம் கட்ட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மனுதாரரின் கோரிக்கையை ஏற்க தடையின்மை சான்று வழங்க மாமனறத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.660**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**17) ம2பொ.1/2501/12**

மதுரை மாநகராட்சி மீது பொது மக்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அவ்வழக்கில் மாநகராட்சிக்கு பாதகமாக தீர்ப்பு பெறப்பட்ட வழக்குகளில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு வருகிறது.

உச்ச நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்குகளில் மாநகராட்சி சார்பாக மூத்த வழக்கறிஞர்கள் வழக்காட வைப்பதற்கு ஒவ்வொரு முறையும் ஆஜராவதற்கு கட்டணம் வழங்கவேண்டும். மேலும் வழக்கின் தன்மைக்கேற்ப வழக்கறிஞர்கள் நியமனம் செய்து கட்டணம் தரவேண்டியுள்ளது. வழக்கின் தன்மைக்கு ஏற்ப மூத்த வழக்கறிஞர்கள் நியமனம் செய்வதற்கும் அன்னாருக்குரிய கட்டணம் ஒவ்வொரு முறையும் ஆஜராவதற்கு ஆணையாளரை நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.661**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**18) JnS1 / 29943 / 06**

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் (JnNURM) மழைநீர் வடிகால் கட்டும்பணிக்கு, கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டது.

| வ.எண். | சிப்பம் எண். | மதிப்பீட்டுத் தொகை (கோடி) |
|---|---|---|
| 1 | 1 | 36.98 |
| 2 | 2 | 48.49 |
| 3 | 3 | 50.09 |
| 4 | 4 | 56.40 |
| 5 | 5 | 32.42 |
| 6 | 6 | 51.18 |
| 7 | 7 | 0.70 |
| | மொத்தம் | 276.31 |

மேற்படி திட்ட மதிப்பீட்டின் படி ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது. மூன்றாம் முறையாக கோரப்பட்டதில் மதிப்பீட்டை விட கூடுதலான சதவிகிதத்தில் பெறப்பட்டதற்கு தமிழ் நாடு ஒப்பந்த குழுமம் ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிகள் மதிப்பீட்டில் உள்ள வடிவமைப்பின்படி துவங்கப்பட்டது. உயர் அதிகாரிகள் ஆய்வு செய்யப்பட்டு CPHEEO–ல் உள்ள வழிமுறைகளை பயன்படுத்தி வடிவமைப்பை மாற்றம் செய்து பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்ததின் அடிப்படையில் வடிவமைப்பை (Design) மாற்றி அமைக்கப்பட்டு மாநகராட்சி தலைமை பொறியாளரிடம் ஒப்புதல் பெறப்பட்டு மாற்றியமைக்கப்பட்ட வடிவமைப்பின்படி பணிகள் துவங்கப்பட்டது.

மேற்படி பணிகள் 2011 வரையில் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு ரூ.50% பணிகள்( ரூ152.42 கோடி) மேற்கொள்ளப்பட்டன பணியை தொடர்ந்து செய்ய அரசானையின்படி மாநகராட்சி 30% நிதி ஒதுக்கீடு செய்ய இயலாமல் பணியை தொடர்ந்து மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டது. எனவே மேற்படி தொகையை மாணியமாக வழங்க கோரி தமிழ்நாடு அரசிடம் வேண்டப்பட்டது.

அரசாணை எண் G.O.Ms No. 103 / நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC2) துறை நாள்: 12.11.2012–ன் படி ரூ.116.13 கோடியும், அரசாணை எண்: G.O.Ms.No.91 / நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் (Mc) 2 துறை நாள்: 26.06.2013–ன் படி ரூ. 133.57 கோடியும் மதுரை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டது.

மேலும் திட்ட செயலாக்கத்திற்கு கோரப்பட்ட எஞ்சிய தொகை ரூ.48.96 கோடியை, 2012-13 மற்றும் 2013-14 ஆண்டுகளில் சிறப்பு முயற்சி எடுத்து குடிநீர் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை இணைப்பிற்காக பெறப்படும் டெப்பாசிட் தொகையில் இருந்து நிதி ஆதாரம் மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

சிறப்பு நிதியாக மழைநீர் வடிகால் பணிக்கு ரூ. 163.78 கோடியை மானியமாக வழங்கவும் மீதம் உள்ள ரூ.32.08 கோடியை மாநகராட்சி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் உத்தரவு வழங்கப்பட்டு நிதியும் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

வடிவமைப்பு மாற்றப்பட்டதாலும், (Design) திருத்திய நிர்வாக அனுமதி ஒப்பந்த தொகைக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாமல் அவசியம் செய்ய வேண்டிய பணிகளுக்கு திருத்திய நிர்வாக அனுமதியில் தொகை ஒதுக்கீடு செய்ப்படவில்லை.

**இன்று வரையில் மழைநீர் வடிகால் கட்டப்பட்டதற்கு கீழ்கண்டவாறு செலவு செய்யப்பட்டது**

| வ.எண் | சிப்பம் எண். | திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை (கோடி) | இன்று வரையில் செலவு செய்யப்பட்ட தொகை (கோடி) |
|---|---|---|---|
| 1 | 1 | 46.65 | 46.17 |
| 2 | 2 | 62.12 | 62.76 |
| 3 | 3 | 62.40 | 52.38 |
| 4 | 4 | 72.16 | 51.66 |
| 5 | 5 | 40.41 | 41.33 |

| | | | |
|---|---|---|---|
| 6 | 6 | 63.89 | 64.53 |
| 7 | 7 | 0.70 | 0.68 |
| | | 348.31 | 320.72 |

சிப்பம் 7–ல் இப்பணியை திருத்தி நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகைக்குள் மேற்படி பணியை முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் நடைபெறும் பணிகளுக்கு தேவைப்படும் தொகை ரூ.5.00 கோடி போக சிப்பம் 4–ல் மீதம் உள்ள தொகை ரூ.15.50 கோடியை கீழ்கண்ட ஐந்து சிப்பங்களுக்கு கூடுதலாகும் தொகையை ஈடு செய்து கொள்ளவும் அதற்குரிய நில பணி அளவுகளை சிப்பம் 4–ல் பதிவு செய்யவும் அனுமதி கோரப்படுகிறது.

மேலும் சிப்பம் 2,5 மற்றும் 6–ல் ஏற்கனவே வழங்கப்பட்ட திருத்திய நிர்வாக அனுமதியை விட கூடுதலாக செலவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சிப்பம் 1,2,3,5 & 6 ஆகிய சிப்பங்களுக்கு திருத்திய நிர்வாக அனுமதியைவிட பணியை முழுமையாக முடிக்க (44.70-8.38) ரூ.36.32 கோடி கூடுதல் தொகை தேவைப்படுகிறது. மேற்படி கூடுதல் தொகையை சிப்பம் 4–ல் மீதமாகும் தொகை ரூ.15.50 கோடி தொகையை ஈடு செய்யவும் மீதம் உள்ள ரூ.20.82 கோடியை உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் திட்ட நிதியிலிருந்து செலவு செய்ய அல்லது ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து செலவு செய்ய அல்லது மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.662</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**19)<u>Jn.S. 2/005364/2013</u>**

Department of Internationl Development – UK நிதியுதவியுடன், மத்திய அரசின் வீட்டு வசதி வாரியம் மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சகம் நாற்பது நகரங்களை தேர்வு செய்து முன் மாதிரியான வறுமை ஒழிப்புத் திட்டங்களை அமுல்படுத்த திட்டமிடப்பட்டது. அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட நகரங்களில் மதுரை மாநகர் ஒன்றாகும். அதன் அடிப்படையில் “Challenge Fund” என்ற தலைப்பின் கீழ் நிதி வழங்க மேற்படி அமைச்சகம் திட்டமிட்டு, முதற்கட்டமாக மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 10 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு சுகாதார வளாகம் & பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் வழங்கவும் மற்றும் விழிப்புணர்வு வழங்கவும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து கடந்த 27.02.2013 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 339) ஒப்புதல் பெறப்பட்டு மேற்ண்ட அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ரூ. 200.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை (HUDCO-HSMI/Challenge Fund/2013, நாள். 21.10.2013) வரப்பட்டது. மேற்கண்ட நிதியில் மானியம் 25% சதவீதத் தொகையான ரூ. 62.50 இலட்சம் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யுமாறு மேற்கண்ட அமைச்சகத்தின் மூலம் கோரப்பட்டது. அதன் அடிப்படையில் கடந்த 20.02.2014 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 586) ஒப்புதல் பெறப்பட்டது. தற்போது 10 இடங்களில் சுகாதார வளாகம் கட்டுவதற்கும் விழிப்புணர்வு முகாம் நடத்துவதற்கும் ரூ. 200.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் முதற்கட்டமாக 10 இடங்களில் பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | வார்டு எண். | மதிப்பீட்டு எண் மற்றும் பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 3 | ம.பொ. 4/ம.எண். 38/14–15<br>கோசாகுளம் குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 21.50 |
| 2. | 3 | ம.பொ. 4/ம.எண். 39/14–15<br>சிலையனேரி குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 21.50 |
| 3. | 8 | ம.பொ. 4/ம.எண். 40/14–15<br>மேலக் கைலாசபுரம் குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 21.50 |
| 4. | 28 | ம.பொ. 4/ம.எண். 41/14–15<br>உத்தங்குடி குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 21.50 |
| 5. | 56 | ம.பொ. 4/ம.எண். 42/14–15<br>இந்திரா நகர் குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 21.50 |
| 6. | 60 | ம.பொ. 4/ம.எண். 43/14–15<br>சின்ன உடைப்பு குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 21.50 |

| வ. எண். | வார்டு எண். | மதிப்பீட்டு எண் மற்றும் பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 7. | 75 | ம.பொ. 4/ம.எண். 44/14–15<br>பசுமலை அண்ணா நகர் குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 21.50 |
| 8. | 84 | ம.பொ. 4/ம.எண். 45/14–15<br>பழைய சென்ட்ரல் மார்கெட் (வாகன நிறுத்துமிடம்) பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 21.50 |
| 9. | 94 | ம.பொ. 4/ம.எண். 46/14–15<br>வெள்ளைக்கல் குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 21.50 |
| 10. | 96 | ம.பொ. 4/ம.எண். 47/14–15<br>திருமலையூர் குடிசைப் பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுதல் | 21.50 |
| 11. | –– | நிர்வாக செலவீனம் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடத்துதல் போன்ற செலவீனம் (NGO நியமனம் மூலமாக) | 12.00 |
| | | **மொத்தம்** | **232.00** |

மேற்கண்டவாறு மதிப்பீட்டுப் பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் வேண்டியும் மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையில் மேற்கண்ட அமைச்சகத்தால் வழங்கப்பட்டுள்ள மானியத் தொகை ரூ. 200.00 இலட்சம் போக மீதமுள்ள ரூ.32.00 இலட்சத்தினை மாநகராட்சிப் பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் மாமன்றக் கூட்டத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.663**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**20)ம.பொ. 4/17761/2014**

மதுரை மாநகரானது தென்னிந்தியாவின் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக இருப்பதால் நாள்தோறும் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து கொண்டே செல்கின்றது. மேலும் சுற்றுலா பயணிகள் அதிகளவில் வருவதால் நாள்தோறும் நகருக்குள் உள்ளூர் மற்றும் வெளியூர் பேருந்துகள் வந்த வண்ணம் உள்ளன. மேலும் ஆரப்பாளையம் பேருந்து நிலையத்திற்கு தேனி, திருச்செந்தூர், கரூர், ஈரோடு, திருப்பூர், கோயமுத்தூர் போன்ற மாவட்டங்களுக்கு வந்து செல்லும் பேருந்துகள் மற்றும் கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கு வந்து செல்லும் பேருந்துகள் என சுமார் 1300 பேருந்துகள் மற்றும் நகரப் பேருந்துகள் வந்து செல்கின்றன. இதனால் நகருக்குள் போக்குவரத்து இடையூறுகள் அதிகளவில் ஏற்படுகின்றது. மேலும் தற்போது ஆரப்பாளையம் பேருந்து நிலையம் போதிய இட வசதி இல்லாமல் மிகவும் இடையூறாக உள்ளது.

எனவே போக்குவரத்து இடையூறுகளை கட்டுப்படுத்தும் வகையில் விளாங்குடி பகுதியில் அரசுக்கு சொந்தமான சர்வே எண்.221-1, 222-4,7,8, 223-1,2, 226-1 to 16, 227-2,4, 228-4,5 229-3,5,6ல் சுமார் 19.79 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் புதியதாக மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் மாநகராட்சி சார்பில் பேருந்து நிலையம் அமைப்பதன் மூலம் மாநகராட்சிக்கு வரிவசூல் அதிகரிக்கும் என்பதனால் மேற்படி இடத்தினை மாநகராட்சிக்கு வழங்குவதற்கு அரசின் ஆணை பெற உரிய முன் வரைவு அனுப்பி வைக்கவும் ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தினை விளாங்குடி பகுதியில் மாற்றியமைக்கவும் மேலும் ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தில் நகரப் பேருந்துகள் வந்து செல்லும் வகையில் பேருந்து நிலையத்தினை மாற்றியமைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.664**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 24.07.2014**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2014-ம் ஆண்டு ஜுலை திங்கள் 31-ம் நாள் வியாழக்கிழமை காலை 12.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) Cw1/122/2014**

மதுரை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களை CITY OF DULLAS CHAIRMAN அவர்கள் அமெரிக்கா ஐக்கிய நாட்டின் ஃபுளோரிடா மாநிலத்தில் 22.06.2014 முதல் 25.06.2014 வரை நடைபெறவிருக்கும் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொள்ள அழைத்ததன் பேரில் கருத்தரங்கு கூட்டத்தில் மதுரை மாநகராட்சி சார்பாக 22.6.14 முதல் 25.06.2014 ஆம் தேதி வரை வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் கலந்து கொள்வதற்கும், மாநகராட்சியின் 2014–2015ஆம் ஆண்டின் பொதுநிதியிலிருந்து 6.18 லட்சம் செலவினத்தை மேற்கொள்வதற்கும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களது முன் ஒப்புதலுடன் அரசின் அனுமதி வேண்டி அனுப்பப்பட்ட கடிதத்திற்கு, அரசிடமிருந்து பெறப்பட்ட அரசாணை (GO.Ms.No.238, நகராட்சி நிர்வாகம் & குடிநீர் வழங்கல் தேதி 21.06.2014)ல் முறையான அனுமதி வழங்கப்பட்டது என்ற விபரத்தினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**இணைப்பு :** அரசாணை எண். (GO.Ms.No.238, நகராட்சி நிர்வாகம் &
குடிநீர் வழங்கல் தேதி 21.06.2014) நகல்.

**மாமன்றத்தீர்மானம் எண்.665**
**பதிவு செய்யப்பட்டது.**

**2) மநு2/9156/2007**

மதுரை மாநகராட்சி மைய பொது சுகாதாரப் பிரிவில் உள்ள துப்புரவு பணியாளர்கள் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப திருவிழா காலங்களில் நியமனம் செய்யப்படும் நிபந்தனைகளின் அடிப்படையில் துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு (மாமன்ற தீர்மானம்.1054, நாள் : 28.02.2011 துப்புரவு பணியாளர்கள் 621 நபர்கள் கொசு ஒழிப்பு பணியாளர்கள் 60 நபர்கள் சேர்த்து மொத்தம் 681 நபர்கள் கோப்பு எண். மநு2/9156/2007) நான்கு மண்டலங்களிலும் துப்புரவு பணியாளர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்யும் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றி வருகிறார்கள்.

மேற்படி பணியாளர்கள் 2007 முதல் மாநகரட்சியில் தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணியில் பணியாற்றி வருவதாலும், தற்போது அதிகமாக நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியிடம் காலியாக இருப்பதாலும் அன்னார்களை அரசாணை எண்.385 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் : 01.10.2010ன்படி சிறப்பு காலமுறை சம்பளம் நிர்ணயம் செய்யவும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருந்து முன்னுரிமை பட்டியல் பெற்று நிரப்புவதில் இருந்து விதிவிலக்கு அளித்தும் அரசின் பின்னேற்பு பெற்று சிறப்பு காலமுறை சம்பளம் வழங்கவும், உரிய பிரேரணை அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.666**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

### 3) <u>ம.பொ. 4/004064/2014</u>

மதுரை மாநகரில் பருவமழை பொய்யத்ததன் காரணத்தினாலும் வைகை அணையின் நீர் இருப்பு குறைந்து வருகின்ற காரணத்தினாலும் மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை சமாளிக்கும் பொருட்டு மாநகராட்சி வார்டுப் பகுதிகளில் வறட்சி நிவாரணப் பணிகளான புதிதாக ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், தனியாருக்கு சொந்தமான திறந்தவெளி கிணறுகளிலிருந்து குடிநீர் எடுக்கப்பட்டு தனியார் ஒப்பந்த லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல், விரிவாக்கப் பகுதிகளில் குடிநீர் குழாய் மெயின் மாற்றியமைத்தல், நீர் உறிஞ்சும் கிணறுகள் கட்டுதல் மற்றும் மின் மோட்டார்கள் புதிதாக வாங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு ரூ. 3470.80 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் வறட்சி பணிகளை மேற்கொள்ள தமிழக அரசு சிறப்பு நிதியாக ரூ. 2054.00 இலட்சத்தினை அரசாணை எண். 89, வருவாய்த் துறை (DM.III (1)), நாள். 24.02.2014ன் அடிப்படையிலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயற்குறிப்பு உத்திரவு ந.க.எண். 4282/2013/E 2, நாள்.26.02.2014 அடிப்படையிலும் மாவட்ட பேரிடர் மீட்பு திட்டம் (State Disaster Responsible Fund) நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்து கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளுமாறு உத்திரவிடப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மாநகராட்சிக்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் புதிதாக ஆழ்துளைக் கிணறுகள் சின்டெக்ஸ் தொட்டியும் அமைத்தல் (500 எண்ணம்) | 1356.50 |
| 2. | தனியாருக்கு சொந்தமான திறந்தவெளி கிணறுகளிலிருந்து குடிநீர் எடுக்கப்பட்டு தனியார் ஒப்பந்த லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | 1134.30 |
| 3. | முல்லை நகர், காலங்கரை, இந்திரா நகர், இராதாகிருஷ்ணன் நகர், மேனேந்தல் மற்றும் பூந்தமல்லி நகர் பகுதிகளில் குடிநீர் மெயின் குழாய்கள் மாற்றியமைத்தல் | 50.00 |
| 4. | வைகை ஆற்றுப்படுகையில் உள்ள தச்சம்பத்து பகுதிகளில் நீர் உறிஞ்சும் கிணறு அமைத்தல் | 10.00 |
| 5. | மின்மோட்டார்கள் புதிதாக வாங்குதல் | 100.00 |
| 6. | மோட்டார் அறையினை புனரமைப்பு செய்தல் | 10.00 |
| 7. | ஜெனரேட்டர்கள் புதிதாக வாங்குதல் மற்றும் வாடகை அடிப்படையில் ஏற்பாடு செய்தல். | 30.00 |
| 8. | மேலக்கால் குடிநீரேற்று நிலையத்தில் நீர் உறிஞ்சும் கிணறு கட்டுதல். | 90.00 |
| 9. | கோச்சடை மற்றும் தெப்பக்குளம் பகுதியில் நீர் உறிஞ்சும் கிணறு கட்டுதல் மற்றும் திருப்புவனம் மணலூர் குடிநீரேற்று நிலையத்தினை புனரமைப்பு செய்தல். | 690.00 |
| | **மொத்தம்** | **3470.80** |

மேற்கண்டவாறு வறட்சி நிவாரணப் பணிகளின் அவசர அவசியத்தினைக் கருத்தில் கொண்டு இப்பணிகளுக்கு உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டு, வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்கண்டவாறு மதிப்பீட்டுத் தொகை ரூ.3470.80 இலட்சத்தில் அரசு மானியமாக வழங்கிய ரூ.2054.00 இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.1416.80 இலட்சத்தினை மாநகராட்சியின் நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம், அபிவிருத்தி இடைவெளி நிரப்புதல் நிதி, பராமரிப்பு, இயக்குதல் நிதியின் கீழ் மானியமாக பெற்றோ அல்லது அரசு நிதி நிறுவனங்கள் மூலம் கடனாக பெற்றோ நிறைவேற்றுவதற்கும் வறட்சி நிவாரணப் பணிகளான வரிசை எண். 1 முதல் 8வரையுள்ள பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.667</u>

<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

## 4) ம.பொ.4/ 17333 /2013–14

மதுரை மாநகராட்சியில் வைகை குடிநீர் திட்டம் I மற்றும் II திட்டங்களின் மூலம் மதுரை மாநகராட்சியின் பழைய வார்டுப் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் சீரான முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட வார்டுப் பகுதிகளுக்கு வைகை ஆற்றுப்படுகையில் அமைக்கப்பட்ட நீர் உறிஞ்சி கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் பெறப்படும் நீரைக் கொண்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. குடிநீர் விநியோகம் சீராக இல்லாத பகுதிகளுக்கு தனியார் மற்றும் மாநகராட்சி லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

மதுரை மாநகராட்சிக்கு வைகை ஆற்றுப்படுகையின் மூலம் குடிநீர் வழங்கும் திட்டங்களில் ஒன்றான மணலூர் மற்றும் திருப்புவனம் தலைமை நீரேற்று நிலையத்தினை புனரமைப்பு செய்யவும் இக்குடிநீர் திட்டத்திலிருந்து மாநகராட்சிக்கு குடிநீர் எடுத்து செல்லும் AC குழாய்கள் மிகவும் பழமையானதாக உள்ளதால் அடிக்கடி உடைந்து குடிநீர் வீணாவதாலும் மற்றும் பல இடங்களில் குடிநீர் கசிவு அடிக்கடி ஏற்படுவதால் பழைய பிரதானக் குடிநீர் குழாய்களை மாற்றியமைக்கவும் மணலூர் கிணற்றின் நீரினை சுத்திகரிப்பு செய்யவும் சுமார் ரூ. 16.00 கோடியில் திட்ட அறிக்கை மாமன்ற ஒப்புதல் பெற்று IUDM திட்டத்தின் கீழ் நிதி ஒப்புதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. தமிழக அரசு IUDM திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு கீழ்க்கண்டவாறு செய்யப்பட்டது.

| வ. எண். | வேலையின்விபரம் | திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | நிதி ஆதாரம் | |
|---|---|---|---|---|
| | | | மானியம் | உள்ளாட்சி நிதி |
| 1. | திருப்புவனம் முதல் மணலூர் நீரேற்று நிலையம் வரையுள்ள 350 மி.மீ. விட்டமுள்ள AC குழாய்களை மாற்றி 350 மி.மீ. விட்டமுள்ள DI குழாய்கள் பதித்தல் (சிப்பம் 1) | 227.00 | –– | 227.00 (மாநகராடசி பொது நிதி) |
| 2. | மணலூர் நீரேற்று நிலையத்தில் 5 MLD கொள்ளளவு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் (சிப்பம் 2) | 370.00 | –– | 370.00 (மாநகராடசி பொது நிதி) |
| 3. | மணலூர் நீரேற்று நிலையத்திலிருந்து மதுரை மாநகரம் வரையுள்ள 450 மி.மீ. விட்டமுள்ள AC குழாய்களை 450 மி.மீ. விட்டமுள்ள DI குழாய்கள் பதித்தல் (சிப்பம் 3) | 1043.00 | 600.00 | 443.00 (மாநகராடசி பொது நிதி) |
| | **மொத்தம்** | **1640.00** | **600.00** | **1040.00** |

மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டின்படி நிர்வாக ஒப்புதல் மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டது.

| வரிசை எண் | வேலையின் பெயர் | நிர்வாக ஒப்புதல் | தொழில்நுட்ப ஒப்புதல் |
|---|---|---|---|
| 1. | திருப்புவனம் முதல் மணலூர் நீரேற்று நிலையம் வரையுள்ள 350 மி.மீ. விட்டமுள்ள AC குழாய்களை மாற்றி 350 மி.மீ. விட்டமுள்ள DI குழாய்கள் பதித்தல் (சிப்பம் 1) | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நடவடிக்கை எண்: Roc No.19229/P2/2013-14 date.19.09.2013 Rs.227/- | ER No.407/2013-14 Rs.229 இலட்சம் |
| 2. | மணலூர் நீரேற்று நிலையத்தில் 5 MLD கொள்ளளவு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் (சிப்பம் 2) | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நடவடிக்கை எண்: Roc No.19229/P2/2013-14 date.19.09.2013 Rs.370/- | Roc No.5005/2014/DOI/ date:04.07.2014 Rs.370 Lakhs |
| 3. | மணலூர் நீரேற்று நிலையத்திலிருந்து மதுரை மாநகரம் வரையுள்ள 450 மி.மீ. விட்டமுள்ள AC குழாய்களை 450 மி.மீ. விட்டமுள்ள DI குழாய்கள் பதித்தல் (சிப்பம் 3) | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நடவடிக்கை எண்: Roc No.19229/P2/2013-14 date.19.09.2013 Rs.227/- | ER No.54/2013-14 Rs.1043 Lakhs |

மதுரை மாநகராட்சி, தற்போது இணைக்கப்பட்டுள்ள தபகுதிகளுக்கான தவளர்ச்சி திட்டப்ப பணிகளை மேற்கொண்டு வரும் நிலையில், விரிவாக்கப் பகுதிகளுக்காக குடிநீர் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட மேற்கண்ட திட்டத்தின் ரூ.600 இலட்சம் மானியமாகவும் ரூ.1040 இலட்சம் பொது நிதியிலிருந்தும் மேற்கொள்ள உத்தரவு வழங்கியமையை மதுரை மாநகராட்சி நிதி நிலைமை கருத்தில் கொண்டு இத்திட்டத்திற்கான ரூ.1640 இலட்சத்தை ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி திட்டத்தின் (IUDM) கீழ் முழு மானியமாக ஒப்புதல் செய்வதற்கு தமிழக அரசை கேட்டுக்கொள்வதற்கு மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.668**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

5) **H6/23850/13**

மதுரை மாநகராட்சியின் 100 வார்டுகளின் உள்ள அடிப்படை தேவைகளான குடிநீர், பாதாள சாக்கடை கழிவுகளை அப்புறப்படுத்தும் பணி டெங்கு மற்றும் சிக்குன் குனியா கொசு ஒழிப்பு மற்றும் பிற புதிய பணிகளை போர்கால அடிப்படையில் மற்றும் அடிப்படை தேவைகளை முறையாக செயல்படுத்தும் அம்மா திட்டம் பொது மக்களின் மிகுந்த வரவேற்புடன் கடந்த ஒரு வருடமாக செயல்பட்டு வருவதால் இந்த வருடமும் தொடர்ந்து அம்மா திட்டத்தினை அமுல்படுத்த மண்டலம் ஒன்றுக்கு (ஆண்டிற்கு) ரூ40,00,000/- வீதம் முதல் 6 மாத காலத்திற்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :**

| | | | |
|---|---|---|---|
| 1. | தொடர்ந்து செலவினம் (ஊதியம்) 50 பணியாளர்களுக்கு 6 மாதத்திற்கு | – | 17,50,000 |
| 2. | தொடர் செலவினம் சுகாதாரம் மற்றும் தட்டுமுட்டு பொருட்கள் 6 மாதத்திற்கு | – | 3,50,000 |
| | | - | 20,00,000 |

தலா ரூ. 20,00,000/- வீதம் 4 மண்டலங்களுக்கு ரூ. 80,00,000/- (6 மாதங்களுக்கு)

**மாமன்றத்தீர்மானம் எண்.669**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

6) **மநி4/19546/13**

மதுரை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் மருந்தகங்களுக்கு தேவையான மருந்துகள் கொள்முதல் செய்ய ஆண்டு ஒன்றுக்கு ரூ.32 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாமன்ற தீர்மானம் எண்.417, நாள் : 26.06.2013ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தற்போது 2014-15ம் ஆண்டிற்கான மருந்துகள் ரூ.32 லட்சத்திற்கு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.670**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

7) **JnS2/21387/14-UGSS – Pack-III**

பழைய மதுரை மாநகராட்சி பகுதியில், உட்கட்டமைப்புகளை மேம்படுத்த ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஐந்து திட்டங்கள் ஒப்புதல் செய்யப்பட்டது. இதில் மூன்று திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது, மீதமுள்ள இரண்டு திட்டங்களில் மழைநீர் வடிகால் கட்டுமான பணிகள் முடியும் தருவாயிலும், பழைய மதுரை மாநகராட்சி பகுதியல் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குதல், பழைய பாதாள சாக்கடையை மாற்றி அமைத்து புதிய பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குதல் மற்றும், நவீன முறையில் சாக்கடை நீரை சுத்திகரிப்பு செய்தல், ஆகிய பணிகள் முடிவுறாத நிலையிலும் உள்ளது.

பழைய மதுரை மாநகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டம் மூன்று Package-களாக ஒப்புதல் செய்யப்பட்டு, அதில் Package I & II–ன் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. Package-IIIல், விடுபட்ட பகுதிகட்கு பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குதல் மற்றும் ஏற்கனவே உள்ள பழைய பாதாள சாக்கடை அமைப்பு உள்ள பகுதியில் புதிய பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குதல் போன்ற பணிகளை செய்வதற்கு M/s தீபிகா இன்பிராடெக் (பி) லிட், ஹைட்ராபாத் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு 05.02.2009 அன்று வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் பணியினை முடிப்பதற்கான ஒப்பந்த

காலம் **24** மாதங்களாக நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இந்நிறுவனம், மேற்கண்ட காலத்தில் பணியினை முறையாக மேற்கொள்ளாமல் பணியின் முன்னேற்றத்தில் மிகவும் தொய்வான நிலை ஏற்பட்டது. இந்நிலையில் பணியினை விரைவாக முடிக்க ஷோகாஸ் நோட்டீஸ் மற்றும் அபராதமும் விதிக்கப்பட்டது. இதனை அந்நிறுவனம், ஏற்காமல் Adjudicator-யிடம் முறையீடு செய்தது. Adjudicator-ரும் இருதரப்பின் ஆவணங்களை பரிசீலனை செய்து கால நீட்டிப்பு மட்டும் **31.05.2011** வரை வழங்கினார். ஆனால் அதனை ஏற்காமல், Arbitration Tribunal-லில் மேல்முறையீடு செய்தது. Arbitration Tribunal இருதரப்பின் ஆவணங்கள் மற்றும் வாதங்களின் அடிப்படையில் கால நீட்டிப்பும், ஒப்புதல் செய்யப்பட்ட வரைபடங்கள் கொடுக்கப்பட வேண்டும். மற்றும் பழைய பாதாள சாக்கடை அமைப்பு உள்ள பகுதிகளில் பாதாள சாக்ககடை அமைப்பதற்கு புதிய விலைப்புள்ளி தயார்செய்து அந்நிறுவனத்தின் இசைவு கேட்கப்படுமாறும், அவ்வாறு இசைவு இல்லாத பட்சத்தில் பணியினை வேறொரு நிறுவனத்திற்கு மதுரை மாநகராட்சி அளிக்கலாம் எனவும் அதில் தலையிட அந்நிறுவனத்திற்கு எவ்வித உரிமையும் இல்லை என உத்தரவு பிறப்பித்தது. மேலும் ஒப்புதல் செய்யப்பட்ட வரைபடங்கள் கொடுக்கப்பட்ட நாட்களிலிருந்து **18** மாதங்களில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்தது, பணியினை விரைவாக முடிக்கும் நோக்கத்தோடு காலநீட்டிப்பும், தேவையான ஒப்புதல் செய்யப்பட்ட வரைபடங்கள் 11.02.2013ல் அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. பழைய பாதாள சாக்கடை அமைப்பு உள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை அமைப்பதற்கு புதிய விலைப்புள்ளி தயார்செய்து அந்நிறுவனத்தின் இசைவுபெற்று உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்கண்ட பணியினை, வரைபடங்கள் கொடுத்து **18** மாதங்களில் முடித்துதர Action Plan-யை அந்நிறுவனம் குறித்த காலத்தில் தராததால் Arbitration Tribunal உத்தரவின்படி மதுரை மாநகராட்சியே தயார்செய்து அந்நிறுவனத்திற்கு அனுப்பி வைத்தது. மேலும் இந்நிறுவனத்திற்கு பணியின் துவக்க காலத்தில் முன்பணமாக ரூ.**13.00** கோடி கொடுக்கப்பட்டு மீதம் ரூ.8.74 கோடி பிடித்தம் செய்ய வேண்டிய நிலையிருந்தும் இந்நிறுவனம் சரியான planning இல்லாமலும் தேவையான பொருட்களை தருவிக்காமலும் பணிகளைச் செய்வதற்கு கூடுதலான வேலையாட்கள் இல்லாமலும் பணியனை மிகவும் தாமதமாக செய்து வந்தனர். இதனால் இந்நிறுவனம் முதல் Mile Stone Target-ஐ கூட எட்டாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் பணியினை மிகவும் தாமதமாக செய்தமைக்காக ஷோகாஸ் நோட்டிஸ் கொடுக்கப்பட்டது.

இந்நநிறுவனம் கேட்டுகொண்டதற்கிணங்க Revised action plan-ஐ ஏற்றுக்கொண்டு பணியினை துரிதப்படுத்த உத்தரவிடப்பட்டது. இந்நிலையிலும் இந்நிறுவனம் ஏற்றுக்கொண்ட action plan-படி இரண்டாவது Mile stone இலக்கையும் எட்டாமல் மிகவும் பின்தங்கிய நிலையில் மீண்டும் இரண்டாவது ஷோகாஸ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. இந்நிலையில் இந்நிறுவனம் எந்த ஒரு விளக்கத்தையும் கொடுக்காமலும் வேலை தளத்தில் பணிகளை மேற்கொள்ளாமல் நிறுத்தி வைத்தது Arbitration Tribunal வழங்கிய காலக்கெடுவும் முடிந்த நிலையில் இந்நிறுவனத்திற்கு வழஙகிய மேற்கண்ட பணியின் ஒப்பந்தத்தை JnS2 / 21387/ 08 – UGSS-pack-III, Date: 11.07.2014-ல் இரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும் அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட முன்பணத்திற்கு ஈடாக அந்நிறுவனம் கொடுத்திருந்த Dena Bank மற்றும் Axis Bank, Bank Guarantee-களை பணமாக மதுரை மாநகராட்சி கணக்கில் செலுத்திட வங்கிகட்கு கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்தத்தை இரத்து செய்த நிலையில், மீதமுள்ள பணியினை மேற்கொண்டு முடிக்க மறு ஒப்பந்தபுள்ளி கோர வேண்டிய நிலை உள்ளது. இதனால் மதுரை மாநகராட்சிக்கு ஏற்படும் கூடுதல் செலவீனத்தை, ஒப்பந்த சரத்துகளின்படி M/s Deepika Infratech (P) Ltd., நிறுவனமே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இந்த கூடுதல் செலவீனத்தை மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து Legal நடவடிக்கை தொடர்ந்து பெற்றிடவும், விரைவில் பணியினை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு, கூடுதல் செலவீனத்தை முதலில் மாநகராட்சி சொந்த நிதியில் செய்திடவும், பின்னர் அக்கூடுதல் செலவீனத்தை அந்நிறுவனத்திடமிருந்து பெற்று ஈடு செய்து கொள்ளவும், மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.671**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) JnS2/21387/14-UGSS – Pack-III**

பழைய மதுரை மாநகராட்சி பகுதியில், உட்கட்டமைப்புகளை மேம்படுத்த ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஐந்து திட்டங்கள் ஒப்புதல் செய்யப்பட்டது. அதில் மூன்று திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு திட்டங்களில் மழைநீர் வடிகால் கட்டுமான பணிகள் முடியும் தருவாயிலும், பழைய மதுரை மாநகராட்சி பகுதியல் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குதல், பழைய பாதாள சாக்கடைகயை மாற்றி அமைத்து புதிய பாதாள சாக்கடை

அமைப்பு உருவாக்குதல் மற்றும், நவீன முறையில் சாக்கடை நீரை சுத்திகரிப்பு செய்தல், ஆகிய பணிகள் முடிவுறாத நிலையிலும் உள்ளது.

பழைய மதுரை மாநகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டம் மூன்று Package-களாக ஒப்புதல் செய்யப்பட்டு, அதில் Package I & II முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. Package-IIIல், விடுபட்ட பகுதிகட்கு பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குதல் மற்றும் ஏற்கனவே உள்ள பழைய பாதாள சாக்கடை அமைப்பு உள்ள பகுதியில் புதிய பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குதல் போன்ற பணிகளை செய்வதற்கு M/s தீபிகா இன்பிராடெக் (பி) லிட், ஹைட்ராபாத் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு **05.02.2009** அன்று வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் மேற்கண்ட பணியினை சரிவர செயல்படுத்தாத காரணத்தினால் ஷோகாஸ் நோட்டீஸ். அதன் காரணமாக Adjudication மற்றும் Arbitration Tribunal ஆகியவற்றால் ஒப்பந்த காலம் **11.07.2014** வரை நீட்டிப்பு செய்தும், பணியினை சரிவர செய்யாததால் பணி ஒப்பந்தம் JnS2/21387/ 08 – UGSS Pack-III தேதி: 11.07.2014 உத்தரவில் ரத்து செய்யப்பட்டது.

இந்நிறுவனம் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகளில் ஆங்காங்கே இணைப்பு பணிகள் செய்யப்படாமலும் மேலும் சக்கிமங்கலம் மற்றும் அவனியாபுரம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லும் கழிவுநீர் உந்துகுழாய் பதிக்கும் பணிகளில் இணைப்பு பணிகள் மற்றும் இடைவெளி நிரப்பும் பணி செய்யப்படாமலும் உள்ளது. இதற்கு தோராயமாக ரூ.**3.50** கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இணைப்பு மற்றும் இடைவெளி நிரப்பும் பணிகளை மதுரை மாநகராட்சியின் தொழில் நுட்ப ஒப்புதல் வரம்பிற்குள் ஒப்புதல் செய்து நடவடிக்கை தொடர மாமன்ற ஒப்புதலை பெறவும்.

பழைய பாதாள சாக்கடை திட்டம் அமைக்கப்பட்ட பகுதிகளில், பாதாள சாக்கடை திட்ட அமைப்பை உருவாக்கும் பணிக்கு அனைத்து பகுதிகளையும் மொத்தமாக சேர்த்து M/s Deepika Infratech Pvt., Ltd., Hyderabad, என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. மேற்கண்ட நிறுவனம் பணிகளை சரிவர செய்யாதால் தற்போது ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்ட நிலையில் உள்ளது. இந்நிறுவனம் ஒப்பந்த காலத்தில் 116 km-க்கு சுமார் 15.86 km மட்டுமே முடித்துள்ளது. மீதமுள்ள பணிகளை உடனே மேற்கொண்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக M/s Deepika Infratech Pvt., Ltd., Hyderabad, நிறுவனம் செய்ய வேண்டிய மீதமுள்ள பணிகளை Block wise கணக்கீடு செய்யப்பட்டு, மதிப்பீடு block wise தயார் செய்வதற்கு மாமன்ற ஒப்புதலை பெறவும் அவ்வாறு தனித்தனியே Block wise பிரிக்கப்பட்ட மதிப்பீடுகளை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதல் பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.672</u>

<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**9) <u>JnS2 / 7379 /2012</u>**

மதுரை மாநகராட்சியுடன், **17** உள்ளாட்சி அமைப்புகள் கீழ்கண்ட பகுதிகள் தமிழக அரசு நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆணை எண்: 220 தேதி. 28.09.2010 மூலம் இணைக்கப்பட்டு ஒருங்கிணைந்த **100** வார்டுகள் கொண்ட மாநகராட்சி உருவாக்கப்பட்டது. இவ்வாறு இணைக்கப்பட்ட பகுதிகட்கு பழைய மாநகராட்சிக்கு இணையாக அடிப்படை வசதிகளை ஏற்படுத்ததுவதற்கு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இத்திட்டங்களில் ஒன்றாக, இணைக்கப்பட்ட பகுதிகட்கு ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு M/s InfraEn, (India) Pvt Ltd., Bangalore என்ற நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டது, இந்நிறுவனம், இணைக்கப்பட்ட பகுதிகட்கு பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குவதற்காக அனைத்து இணைக்கப்பட்ட பகுதிகளிலும் களப்பணிகள் மேற்கொண்டு கீழ்க்கண்டவாறு இரண்டு பகுதிகளாக பிரித்து திட்டத்தை உருவாக்க உத்தேசித்து கருத்துரு மதுரை மாநகராட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

1. மதுரை மாநகராட்சியின் வைகை தென்கரைப்பகுதியில் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கான பாதாளச்சாக்கடை திட்டம் (வார்டு எண்: **55**, 56, 58 to 62,94 to 99).
2. மதுரை மாநகராட்சியின் வைகை வடகரைப்பகுதியில் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டம் (வார்டு எண்: **1** to 4, 23 to 26, 28 to 32, 48 & 49).

இத்திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சியின் வைகை தென்கரைப் பகுதியில் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைத்திடவும் அதன் மூலம் சேகரிக்கப்படும் கழிவுநீர் தற்பொழுது உள்ள அவனியாபுரம் நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு செய்யப்படுமாறும், வைகை வடகரைபகுதியில் இணைக்கப்பட்ட பகுதிக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைத்திடவும், அதன் மூலம் பெறப்படும் கழிவுநீரின் ஒரு

பகுதி தற்போது சக்கிமங்கலத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு செய்யப்படுமாறும் மறுபகுதி மாட்டுத்தாவணி பஸ் நிலையம் அருகே நவீனகழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் புதியதாக அமைக்கப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்படுமாறு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடு கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | திட்ட விபரம் | வார்டுகளின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு ரூ. கோடியில் | பராமரிப்பு மதிப்பீடு ரூ. கோடியில் |
|---|---|---|---|---|
| I | வைகை தென்கரைப் பகுதியில் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகட்கு பாதாள சாக்கடை அமைப்பு (வார்டு எண்: (55,56,58-62,94-99) | 13 வார்டுகள் | ரூ.214.60 | ரூ.2.45 |
| II | வைகை வடகரைப் பகுதியில் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகட்கு பாதாள சாக்கடை அமைப்பு (வார்டு எண்: (1 to 4,23-26,28-32,48,49) | 15 வார்டுகள் | ரூ.402.71 | ரூ.2.04 |

தற்பொழுது இணைக்கப்பட்ட 28 வார்டுகளுக்கு பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குவதற்கு தென்கரைப்பகுதிகளுக்கு ரூ.214.60 கோடியும் மற்றும் வட்கரைப்பகுதிகளுக்கு ரூ.402.71 கோடியும் என இரண்டு திட்டங்களாக தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மத்திய மாநில அரசிடமிருந்து நிதிபெற்று செயலாக்குவதற்கு அரசின் ஒப்புதலை பெற மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.673**

**அரசின் ஒப்புதலைப் பெற குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10) H3/002118/2014**

மதுரை மாநகரில் 2014ம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத் திருவிழா, அருள்மிகு கள்ளழகர் திருவிழாவிற்கும் மாட்டுத்தாவணிக்கும் வருகை தரும் பொது மக்களின் வசதிக்காக துப்புரவு பணிகள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின் வசதி, தற்காலிக துப்புரவு ஊழியர்கள், ஊதியம், சாதனங்கள், கிருமி நாசினிகள், பிரச்சார விளம்பர பொருட்கள், தற்காலிக கொட்டகைகள் மற்றும் இதர செலவினங்களுக்காக பொது சுகாதாரப்பிரிவின் உத்தேச செலவினம் ரூ.28,40,890/- மற்றும் பொறியியல் பிரிவின் உத்தேச செலவு தொகை ரூ.57,25,000/- ஆகியவைகளுக்கு ஏற்படும் உத்தேச மொத்த செலவு தொகை ரூ.85,65,890/- (ரூபாய் எண்பத்தைந்து லட்சத்து அறுபத்தைந்தாயிரத்து எண்ணூற்று தொன்னூறு மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ததற்கு தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் இருந்ததால் மாமன்றத்தின் பின்னேற்பினைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| வ.எண் | உத்தேச செலவினங்களுக்கு ஏற்படும் பணிகள் விபரம் | மதிப்பீடு (ரூ. லட்சம்) |
|---|---|---|
| 1 | பொது மக்களின் குடிநீர் வசதிக்காக வைகை ஆற்றின் தென்பகுதி சாலையில் 27 இடங்களில் PVC தொட்டி அமைத்தல் மற்றும் Temporary shed அமைத்தல் | 760000 |
| 2 | ஒபுளாபடித்துறை பாலம் (வைகை தென்கரை சாலை முதல் ஆழ்வார்புரம் வரை) இருபுறம் தற்காலிக Barricade அமைத்தல். | 140000 |
| 3 | தல்லாகுளம் வைகை ஆற்றுப்பகுதி இராமஇராயர் மண்டபம் வண்டியூர் ஆகிய இடங்களில் மின்வசதி அமைத்தல். | 700000 |
| 4 | வார்டு எண் 32ல் தேனூர் மண்டபம் பகுதியில் சித்திரை திருவிழாவிற்கு முன்னேற்பாடுகள் செய்தல். | 400000 |
| 5 | வார்டு எண் 29ல் வண்டியூர் பகுதியில் சித்திரை திருவிழாவிற்கு முன்னேற்பாடுகள் செய்தல். | 500000 |
| 6 | வார்டு எண் 36ல் மணல் பரப்புதல் Barricating மற்றும் பந்தல் அமைக்கும் பணி | 780000 |
| 7 | வார்டு எண் 36ல் ஆழ்வார்புரத்தில் தற்காலிகமாக பாலம் அமைத்து நடைபாதை அமைத்தல். | 495000 |
| 8 | நான்கு மாசி வீதிகளில் தார்பேச் அமைக்கும் வேலை | 1000000 |
| 9 | வடக்குமாசி வீதி மற்றும் மேலமாசி வீதி சந்திப்பில் மேடை அமைத்தல். | 200000 |
| 10 | நான்கு மாசி வீதிகளில் பிளாட்பாம்களில் வர்ணம் பூசுதல் | 500000 |
| 11 | கலையரங்கத்தில் அரங்கம் அமைத்தல் | 250000 |

| | | |
|---|---|---|
| 12 | துப்புரவு பணி தற்காலிக தினச்சம்பள ஊழியர்கள் சம்பளம் | 835890 |
| 13 | துப்புரவு பணி சாதனங்கள் | 720000 |
| 14 | துப்புரவு பணி கிருமி நாசினிகள், பூச்சிக்கொல்லிகள், சுண்ணாம்புத்தூள் மருந்துகள் | 1200000 |
| 15 | பிரச்சார விளம்பரம் தொடர்பான செலவினம் | 60000 |
| 16 | துப்புரவு பணி சம்பந்தமாக எதிர்பாராமல் ஏற்படும் அவசர செலவினங்களுக்கு முன்பணம் | 25000 |
| | **மொத்த செலவினம்** | **8565890** |

**மாமன்றத்தீர்மானம் எண்.674**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11) ம.3.எ 5/ 009711 / 2013**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் புதிய பாதாள சாக்கடை இணைப்புகள் குடிநீர் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் தொலைபேசி வடங்கள் பதிப்பதற்காக சாலைகளை தோண்டப்படுகிறது. அவ்வாறு தோண்டப்படும் சாலைகளுக்கு சாலை சீரமைப்புக் கட்டணம் கடந்த ஆண்டின் (2013–14) விலை விகிதத்தின் அடிப்படையில் கூடுதலாக ஐந்து சதவிகிதம் உயர்த்தி கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

| **வ. எண்.** | **விபரம்** | **சாலை சீரமைப்புக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு)** |
|---|---|---|
| ***1*** | ***2*** | ***3*** |
| 1. | தார்சாலை | 2331.00 |
| 2. | சிமெண்ட் கான்கிரீட் சாலை | 1390.00 |
| 3. | மெட்டல் சாலை | 1060.00 |
| 4. | மண் சாலை | 370.00 |
| 5. | கல்தளம் | 450.00 |
| 6. | பேவர் சாலை | 2405.00 |
| 7. | பேவர் பிளாக் சாலை | 945.00 |

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் சுற்றறிக்கையின் (ந.க. எண். 748/08/குவ 2) படி நடப்பாண்டில் (2014–15) புதிய குடிநீர் இணைப்பிற்கென சாலையினை தோண்டுவதற்கு கீழ்க்கண்ட சாலை சீரமைப்புக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **விபரம்** | **கருங்கல் சாலை** | **தார் சாலை** | **சிமெண்ட் கான்கிரீட் சாலை** |
|---|---|---|---|---|
| ***1*** | ***2*** | ***3*** | ***3*** | ***3*** |
| 1. | 0.30 மீட்டர் நீளத்திற்கு | 1350.00 | 2890.00 | 3420.00 |
| 2. | 30.90 மீட்டர் நீளத்திற்கு | 2120.00 | 3650.00 | 4090.00 |

மேற்கண்டவாறு புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதற்காக சாலைகள் தோண்டப்படும் போது மேற்கண்டவாறு நடப்பாண்டு சாலை சீரமைப்புக் கட்டணத்தினை வசூல் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.675**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**12)மபொ4/24683/13**

சுவீடன் நாட்டு தூதரக கடிதம் நாள்:09.07.2013-ல் திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுழற்சி ஆதாரம் சுத்திகரிப்பு மற்றும் பங்களித்தல் நவீன முறையில் சுத்தம் செய்தல், சுற்றுச் சூழல் பாதுகாப்பு இயற்கை பேரிடர் மற்றும் நகர உட்கட்டமைப்பு போன்றவற்றை கற்று வர மதுரை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களையும், ஆணையாளர் அவர்களையும் பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம், சுவீடன் நாடுகளுக்கு சென்றுவர அழைப்பு விடுத்ததின்பேரில்

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கும், ஆணையாளர் அவர்களுக்கும் 25.09.2013 முதல் 01.10.2013 வரை மேற்கண்ட நாடுகளுக்கு சென்றுவர அரசின் அனுமதி பெறுவதற்கும் இதற்கான செலவினத்தை மதுரை மாநகராட்சியின் 2013-2014 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கப்பட்ட பொது நிதியிலிருந்து செலவிடப்படவும் மாமன்ற ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்பட்டு, தீர்மானம் (மாமன்ற தீர்மானம் எண்.477, நாள்:04.09.2013-ல்) நிறைவேற்றப்பட்டு, மாமன்ற தீர்மான நகலுடன் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மூலம் அரசின் அனுமதிக்காக கடிதம் அனுப்பப்பட்டது.

தமிழக அரசின் முதன்மை செயலாளர்(பொது) அவர்களின் கடிதம் எண்.2-16024/2013 PHE-11 நாள்:18.09.2013 வெளிநாடு சென்றுவர தடையின்மை சான்று வழங்கப்பட்டு, அதன் நகல் மத்திய அமைச்சரக நிதித்துறை அமைச்சகத்திற்கும், வெளியுறவுத் துறை அமைச்சரகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக சுவீடன் நாட்டு தூதரக கடிதத்தில், கலந்துகொள்ள உள்ள பிரதிநிதிகளுக்கான பதிவுக் கட்டணம், விமானக் கட்டணம் (up and down) தங்கும் வசதி உள்நாட்டு போக்குவரத்து, உணவு வசதிகள் போன்றவற்றிற்கு வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளருக்கான செலவினத் தொகை ரூ.6,17,980/- செலுத்தக் கோரியதின்பேரில் மதுரை மாநகராட்சி 2013-2014-ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து ரூ.6,17,980/- (ரூபாய் ஆறு இலட்சத்து பதினேழாயிரத்து தொள்ளாயிரத்து எண்பது மட்டும்) நாள்:18.09.2013-ல் செலுத்தப்பட்டது.

கடைசி நிமிடத்தில் மத்திய அரசின் அரசியல் பிரிவின் தடையின்மைச் சான்று வழங்கும்போது 02.10.2013 முதல் 05.10.2013 முடிய இந்திய திருநாட்டின் அப்போதைய ஜனாதிபதி அவர்கள் பிரான்ஸ் நாட்டிற்கு பயணம் மேற்கொள்ளவிருப்பதால் மாற்றுத் தேதி குறிப்பிட்டு பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

மத்திய அரசின் வெளி விவகார மரபு சீர்முறையின்படி இறுதிக் கட்டத்தில் பயணம் மேற்கொள்வதற்குரிய அனுமதி மறுக்கப்பட்டது.

எனவே, முண்பணமாக செலுத்தப்பட்ட ரூ.6,17,980/-ஐ (ரூபாய் ஆறு இலட்சத்து பதினேழாயிரத்து தொள்ளாயிரத்து எண்பது மட்டும்) பலமுறை தொலைபேசி மூலம் கேட்கப்பட்டதற்கு முழுப்பணம் உரிய முறையில் செலவிடப்பட்டுவிட்டதாகவும், திரும்ப வழங்க இயலாது என தெரிவிக்கப்பட்டதாலும், செலுத்தப்பட்ட தொகை திரும்ப பெறப்படாத நிலையில் இச்செலவினம் ரூ.6,17,980/-ஐ மாநகராட்சி 2013-2014-ஆம் ஆண்டின் பொது நிதி செலவினமாக ஏற்றுக் கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.676</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 30.07.2014**

# மதுரை மாநகராட்சி
## மாமன்றக் கூட்டம்
## Table Agenda - நாள் : 31.07.2014

**1) சி.டபிள்யு.2/ 22067/2014**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)–ன்படி **23.07.2014**-ம் தேதி நடைபெற்ற சுகாதாரகுழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : சுகாதாரகுழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.677**
**பதிவு செய்யப்பட்டது.**

**2) மவ3/023328/2014**

மதுரை மாநகரின் தென்பகுதியில் ஸ்காட் ரோடு மற்றும் ஆர்.எம்.எஸ். சாலையில் செயல்படும் பல்பொருள் விற்பனை செய்யும் பஜார் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இப்பஜார் போல் மாநகரின் வடபுறம் அமைத்து தரும்படி சாலையோர வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். தற்போது முத்து வணிக வளாகத்தின் பின்புறம் உள்ள இடம் பொதுமக்களால் சிறுநீர் கழிப்பிடமாக உள்ளது. எனவே மேற்படி இடத்தை சுத்தமாக பராமரிக்கவும், வடபகுதி பொதுமக்கள் மற்றும் சாலையோர வியாபாரிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் மதுரை மாநகராட்சி வருவாயை உயர்த்தும் நோக்கிலும் இணைப்பில் உள்ள வரைபடத்தின்படி நகரமைப்பு மற்றும் பொறியியல் பிரிவு குறிப்பின்படி, மதுரை முத்து வணிக வளாகத்தின் பின்புறம் உள்ள அமெரிக்கன் கல்லூரி சுற்றுச்சுவரை ஒட்டியுள்ள காலியிடத்தில் 8’0”x6’0” அளவில் சுமார் 43 கடைகள் அமைக்க காலியிடமாக ஒதுக்கீடு செய்ய ஏலம் / டெண்டர் அடிப்படையில் ரூபாய் 60,000 முன்வைப்புத் தொகை மற்றும் மாதவாடகை சதுரஅடி ரூபாய் 30 என்ற அடிப்படையில் நிர்ணயம் செய்து இடம் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.678**
**முன்வைப்புத் தொகை ரூ.70,000/-ஆக உயர்த்தி குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3) மநு2/02422/12**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் (100 வார்டுகளில்) தெருக்களில் கொண்டியாய் திரியும் மாடுகளை கட்டுப்படுத்துவதற்கு மாநகராட்சி மூலம் பிடிக்கப்படும் மாடுகளுக்கு அபராத தொகையாக மாடு ஒன்றிற்கு ரூ.2000/-ம் வீதமும் நாள் ஒன்றிற்கு உணவுக்காக ரூ.500/-ம் வசூல் செய்து வருவதை உயர்த்தி அபராத தொகையாக மாடு ஒன்றிற்கு ரூ.3000/-ம் வீதமும் நாள் ஒன்றிற்கு உணவுக்காக ரூ.500/-ம் வசூல் செய்ய மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.679**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) ம.பொ.4/021398/14**

மதுரை மாநகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டங்கள், வைகை அணை அல்லது வைகை ஆற்றுப்படுகையினை ஆதாரமாக கொண்ட திட்டங்களாகவே உள்ளன. இது தவிர தற்போது இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு காவிரி ஆற்றுப்படுகையினை குடிநீர் ஆதாரமாக கொண்ட திட்டம் செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

1980 வரை குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு வைகை அணையில் 600 மில்லியன் கன அடி நீர் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட நீர் வைகை ஆற்றுப்படுகையில் அமைக்கப்பட்டு இருந்த நீர் ஆதாரங்களை மேலக்கால், கோச்சடை கலெக்டர்வெல், கோச்சடை இன்பில்ட்ரேசன் கேலரி போன்ற நீர் ஆதாரங்களை வளப்படுத்துவதற்காக தேவையான நேரத்தில் வைகை அணையில் இருந்து திறந்துவிடப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டது. கடந்த 1970 முதல் 1990 ஆண்டுவரை நகரமயமாக்குதலின் கீழ், மதுரை மாநகர் அபரீதமான வளர்ச்சியினை எட்டியது இந்த காலக்கட்டத்தில் மக்கள் தொகையும் கனிசமாக உயர்ந்த நிலை ஏற்பட்டது.

மக்கள் பெருக்கத்திற்கு ஏற்ப குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்க்கு வைகை அணையில் வருடம் ஒன்றுக்கு ஒதுக்கப்பட்ட 600mcft என்பதனை 1500mcft என்று கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. (G.O Ms No. 878 Dt 04.06.1985). மேலும் அவ்வாறு ஒதுக்கப்பட்ட நீரினை 900mcft குழாய் மூலம் வைகை அணையிலிருந்து எடுக்கப்பட்டு சுத்திகரிப்பு செய்து 68mld கிடைக்கப் பெறுமான திட்டம் 1995–ல் பயன்பாட்டிற்கு கொண்டவரப்பட்டது. பின்னர் வைகை ஆற்றுப்படுகையின் வழியே நீர் ஆதாரங்களை வளப்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மீதமுள்ள 600 மில்லியன் கன அடி நீரை சேதாரங்களை தவிர்ப்பதற்காக குழாய் மூலம் கொண்டுவரும் திட்டம் உருவாக்கப்பட்டு செயலாக்கம் செய்யப்பட்டது.

தற்போது ஒருங்கிணைந்த மதுரை மாநகராட்சி 100 வார்டுகளை கொண்டதாகவும் தற்போதைய மக்கள் தொகை சுமார் 16 இலட்சம் கொண்டதாகவும் இருக்கிறது. தற்கால மற்றும் எதிர்கால குடிநீர் தேவை கீழ்க்கண்டவாறு உள்ளது.

| விபரம் | வருடம் | | |
|---|---|---|---|
| | 2021 | 2036 | 2051 |
| மக்கள் தொகை | 12.04 | 14.02 | 16.76 |
| குடிநீர் தேவை @ 135 Lpcd(Mld) | 162.5 | 195.75 | 226.26 |
| வைகை ஆற்றுப் படுகை நீர் ஆதாரங்கள் மூலம் பெறப்படும் குடிநீர் (Mld) | 10.00 | 10.00 | 10.00 |
| நிகர குடிநீர் தேவை (Mld) | 152.5 | 185.75 | 216.26 |
| ஒரு வருடத்திற்கான குடிநீர் தேவை | 55663 | 67799 | 78935 |
| சேதாரம் @ 15% | 8349 | 10170 | 11840 |
| மொத்த குடிநீர் தேவை வருடத்திற்கு (Mld) | 64012 | 77969 | 90775 |
| மொத்த குடிநீர் தேவை வருடத்திற்கு (Mcft) | 2286 | 2785 | 3242 |
| வைகை அணையின் குடிநீருக்காக ஒதுக்கீடு | 1500 | 1500 | 1500 |
| கூடுதல் குடிநீர் ஒதுக்கீடு தேவைப்படுவது | 786 | 1285 | 1742 |

மேற்கண்ட அட்டவணையின்படி மதுரை மாநகராட்சியின் இன்றைய குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு வருடம் ஒன்றிற்கு சுமார் 800 mcft தேவைப்படும் என்ற நிலை உள்ளது. மேற்கண்ட கூடுதல் குடிநீர் பெறுவதற்கு மதுரை மாநகரை பொறுத்தவரையில் பெரியார் அணையிலிருந்து பெறப்படும் நீரை ஆதாரமாகக் கொண்டு செயலாக்கம் செய்யப்படும் திட்டம் ஒன்றே இசைவானதாகவும் குறைவான திட்ட மதிப்பீடு மற்றும் பராமரிப்பு செலவு உள்ளதாகவும் இருக்கும் என கண்டறியப்பட்டது. இத்திட்டத்தின்படி லோயர் கேம்ப் புனல் நீர் மின்சார நிலையத்திலிருந்து நீர் எடுக்கப்பட்டு பின் கூடலூர், கம்பம், தேனி, வைகை அணை குள்ளபுரம், A.வாடிப்பட்டி வழியே பண்ணைப்பட்டி சுத்திகரிப்பு நிலையத்திற்கு வந்து

சேருமாறும் பின்னர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கண்ணாப்பட்டி, அணைப்பட்டி, தேனூர் வழியே மதுரை அடையுமாறு அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு தோராய மதிப்பீடு ரூ.640.00 கோடி என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே மதுரை மாநகராட்சியின் தற்போதைய குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு பெரியார் அணையில் கூடுதலாக 800 மில்லியன் கன அடி ஒதுக்கீடு செய்யுமாறு தமிழக அரசை கேட்டுக்கொள்வதற்கும், மேலும் இத்திட்டத்தினை செயலாக்கம் செய்வதற்கு தமிழக அரசின் ஒப்புதலைக் கோருவதற்கும் மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.680**

**அரசின் ஒப்புதலைக்கோர குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5) ம.பொ.4/023397/14**

மதுரை மாநகராட்சி 72 வார்டுகளையும் சுமார் 10.50 இலட்சம் மக்கள் தொகையினையும் 52 சதுர கி.மீ பரப்பளவினையும் கொண்டதாக இருந்து வந்தது. கடந்த 2011ம் ஆண்டு அக்டோபர் மாதம் இம்மாநகராட்சியோடு 17 உள்ளாட்சி அமைப்புகள் புதிதாக இணைக்கப்பட்டது. இதன் காரணமாக இம்மாநகராட்சி தற்போது 100 வார்டுகளையும் சுமார் 15.00 இலட்சம் மக்கள் தொகையினையும் 148 சதுர கி.மீ. பரப்பளவினையும் கொண்டதாக விரிவடைந்துள்ளது. புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர், பாதாள சாக்கடை, திடக்கழிவு மேலாண்மை, சாலைகள், தெருவிளக்குகள் மற்றும் மழைநீர் வடிகால் போன்றவை. மாநகரின் தரத்திற்கு இல்லாத காரணத்தினால் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளை உடனடியாக மேம்படுத்த வேண்டிய நிலை உள்ளது.

கடந்த மூன்று நிதியாண்டுகளில் அரசு மானியத்தின் மூலமாக ரூ.414.86 கோடிக்கான பணிகளும் மாநகராட்சி பொதுநிதியின் மூலமாக ரூ.139.32 கோடிக்கான பராமரிப்பு பணிகளும் நடைபெற்று உள்ளது. மாநகராட்சியில் நடைபெறும் அத்தியாவசியத் திட்டப் பணிகளுக்கு உரிய தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்காக நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு தேவையான உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கும் பழைய மாநகரப் பகுதிகளில் குடிநீர் பகிர்மானக் குழாய்களை அமைப்பதற்கும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானியம் பெற்று திட்டங்களை அமுல்படுத்த வேண்டிய நிலை உள்ளது. தற்போது மாநகராட்சியில் செயல்படுத்தப்பட வேண்டிய பணிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண். | திட்டப் பணியின் விபரம் | திட்ட மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | குடிநீர் பகிர்மானக் குழாய்களை புனரமைப்பு செய்தல் | 265.00 | பழைய மாநகராட்சிப் பகுதிகளுக்கு |
| 2. | புதிதாக வைகை ஆற்றின் குறுக்கே மேம்பாலங்கள் கட்டுதல் | 60.00 | பழைய மாநகராட்சிப் பகுதிகளுக்கு |
| 3. | ஆம்னி பேருந்து நிலையம், கனரக வாகன நிறுத்துமிடம் அமைத்தல் | 34.00 | பழைய மாநகராட்சிப் பகுதிகளுக்கு |
| 4. | முல்லை பெரியாறு அணையிலிருந்து பழைய மாநகராட்சி பகுதிகளுக்கு தேவையான கூடுதல் குடிநீர் வழங்கு திட்டம் | 160.00 | பழைய மாநகராட்சிப் பகுதிகளுக்கு |
| 5. | புதியதாக பாதாள சாக்கடை அமைத்தல் | 514.00 | புதிதாக மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 17 உள்ளாட்சி அமைப்பு பகுதிகளுக்கு |
| 6. | திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | 120.00 | புதிதாக மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 17 உள்ளாட்சி அமைப்பு பகுதிகளுக்கு |

மேற்கண்ட ஆறு திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் அனைத்தையும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானியத்தினை பெற்று நிறைவேற்றுவதற்கு தேவையான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குவதற்கு மதுரை மாநகராட்சியில் தற்போது உள்ள நகரப் பொறியாளர் பணியிடத்தினை கண்காணிப்பு பொறியாளர் பணியிடமாக தரம் உயர்த்தவும் அவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட கண்காணிப்பு பொறியாளர் பணியிடத்தில் தற்போது நகரப் பொறியாளராக பணிபுரியும் திரு.ஆ.மதுரம் அவர்களை பணியமர்த்தவும் அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>**மாமன்றத்தீர்மானம் எண்.681**</u>

<u>**அரசுக்கு பரிந்துரை செய்ய குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**</u>

**6) <u>மநி 10/2437/2007</u>**

மதுரை மாநகராட்சி மைய பொது சுகாதாரப் பிரிவில் செயல்படும் மருத்துவமனைகள், மருந்தகங்களுக்கு அரசாணைகளின்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிரந்தர மருந்தாளுநர்கள் காலிபணியிடங்களுக்கு நகராட்சிகள் நிர்வாகம் ஆணையாளர் அவர்களின் கடிதம் எண்.ந.க.எண்.5810/2005/H3 நாள்:03.02.2005 முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் பணியாளர்கள் ஒரு ஆண்டுக்கு நிபந்தனை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டார்கள். அன்னார்களை ஒரு ஆண்டு முடித்து மீண்டும் தொடர்ந்து பணியாற்ற நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதம் எண் ந.க.எண்.5810/2005/H3 நாள்:07.03.2006 தொகுப்பூதிய மருந்தாளுநர்களை ஒரு ஆண்டு முடிந்தவுடன் பணிவிடுதல் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது. அதன்படி மதுரை மாநகராட்சியில் பணிபுரிந்து வந்த மருந்தாளுநர்கள் ஒரு ஆண்டு முடிந்தவுடன் பணிவிடுதல் செய்யப்பட்டார்கள். அதில் 13 மருந்தாளுநர்கள் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை W.P.No.1676,1677, 1678/2007 நாள்:25.01.2007-ன்படி தடை உத்தரவு பெறப்பட்டதால் அன்னார்கள் தொடர்ந்து தொகுப்பூதிய பணியிடத்தில் பணியாற்றி வந்தார்கள்.

மேற்கண்ட தொகுப்பூதிய மருந்தாளுநர்கள் சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை கிளை)யில் தொடரப்பட்ட பலதரப்பட்ட வழக்கு W.P.(MD) No.2678/2013 நாள்:28.03.2012 இறுதி தீர்ப்பில் அன்னார் நீண்ட நாள் மதுரை மாநகராட்சியில் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வரும் காரணத்தினால் அன்னார்களின் மனுவை பரிசீலனை செய்து உரிய உத்தரவு வழங்க அரசுக்கு தெரிவிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை கிளை) தீர்ப்பின் அடிப்படையில் 13 மருந்தாளுநர்கள் கோரிக்கை மனு பரிசீலனை செய்யப்பட்டது. மதுரை மாநகராட்சி பணிவிதிகளின்படி மருந்தாளுநர் பணியிடம் தொகுதி 2 வகுப்பு 3–ல் உள்ளதால் நியமனக்குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மதுரை மாநகராட்சி நியமனக்குழு கூட்டம் 18.07.2013 யில் நடைபெற்றது. மேற்படி நியமனக்குழு கூட்டத்தில் 13 மருந்தாளுநர்கள் கடந்த 7 ஆண்டுகள் மதுரை மாநகராட்சியில் தொடர்ந்து தொகுப்பூதியத்தில் பணியாற்றி வருவதாலும் அன்னார்களின் பணி பொது சுகாதாரத் துறையில் இருப்பதால் அத்தியாவசிய பணியாக இருப்பதால் அன்னார்களை மதுரை மாநகராட்சியில் காலியாக உள்ள மருந்தாளுநர் பணியிடத்தில் நியமனம் செய்யவும், சம்பள விகிதம் 5200-20200 GP 2400 சம்பள விகிதம் வழங்கவும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற விதியை தளர்வு செய்து பின்னேற்பு அரசிடம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பணி நியமனம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டது (நியமனக்குழு தீர்மானம் எண்.21 நாள்:17.10.2013)

நியமனக்குழுவின் பரிந்துரை அடிப்படையில் மதுரை மாநகராட்சியில் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த 13 மருந்தாளுநர்களை மதுரை மாநகராட்சியில் காலியாக உள்ள மருந்தாளுநர்கள் காலி பணியிடத்தில் நியமனம் செய்யவும் சம்பள விகிதம் 5200-20200 GP 2400 சம்பள விகிதம் வழங்கவும், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற விதியை தளர்வு செய்து பின்னேற்பு அரசிடம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பணி நியமனம் செய்ய அரசு உத்தரவு பெற்று தர நகராட்சிகள் நிர்வாக ஆணையாளர் மூலம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை செயலாளர் அவர்களுக்கு இவ்வலுவலக ம.நி 1(10)2437 நாள் 25.06.2013ன் படி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

சென்னை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை முதன்மை செயலாளர் அவர்களின் கடிதம் எண்(D) No.222/MC-4/2013 நாள்: 05.06.2014-யின்படி மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் மநி1/2437/ம7 நாள்:25.06.2013 பரிந்துரை கடிதம் அரசு முழுமையாக

பரிசிலனை செய்ததாகவும் ஆணையாளர் அவர்களின் பரிந்துரை நிராகரிக்கப்பட்டது என்று தெரிவித்து கடிதம் வரப் பெற்றுள்ளது.

சென்னை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை முதன்மை செயலாளர் அவர்களின் கடிதத்தின்படி மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தொகுப்பூதிய பணியிடத்தில் பணியாற்றி வந்த 13 மருந்தாளுநர்கள், ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை மநி10/19295/2014 நாள்:26.06.2014–ன் படி பணியில் இருந்து விடுவிக்கப்பட்டார்கள்.

பணியில் இருந்து விடுவிக்கப்பட்ட மருந்தாளுநர்களில் சிலர் மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை கிளை)யில் வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்குகளை அரசு நிலைக்குழு வழக்கறிஞர் மூலம் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே மதுரை மாநகராட்சி நியமனக்குழு தீர்மானம் எண்.21 நாள்:17.10.2013-ன்படி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களை, அரசு நிராகரிக்கப்பட்டதால், மேற்கண்ட நியமனக்குழு தீர்மானத்தை ரத்து செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.682**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7) மநி10/H6/24759/2013**

மதுரை மாநகராட்சி மைய பொது சுகாதாரப் பிரிவில் செயல்படும் மருத்துவமனைகளுக்கு அரசாணைகளின்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிரந்தர செவிலியர் காலிபணியிடங்களுக்கு நகராட்சிகள் நிர்வாகம் ஆணையாளர் அவர்களின் கடிதம் எண்.ந.க.எண்.5810/2005/H3 நாள்:03.02.2005 முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் பணியாளர்கள் ஒரு ஆண்டுக்கு நிபந்தனை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டார்கள். அன்னார்களை ஒரு ஆண்டு முடித்து மீண்டும் தொடர்ந்து பணியாற்ற நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதம் எண் ந.க.எண்.5810/2005/H3 நாள்:07.03.2006 தொகுப்பூதிய செவிலியர்களை ஒரு ஆண்டு முடிந்தவுடன் பணிவிடுதல் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது. அதன்படி மதுரை மாநகராட்சியில் பணிபுரிந்த வந்த செவிலியர்கள் ஒரு ஆண்டு முடிந்தவுடன் பணிவிடுதல் செய்யப்பட்டார்கள். அதில் 9 செவிலியர்கள் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை M.P(MD) No.2 of 2009, W.P.NO.3089 of 2009-ன்படி தடை உத்தரவு பெறப்பட்டதால் அன்னார்கள் தொடர்ந்து தொகுப்பூதிய பணியிடத்தில் பணியாற்றி வந்தார்கள்.

மேற்கண்ட தொகுப்பூதிய செவிலியர்கள் சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை கிளை)யில் தொடரப்பட்ட பலதரப்பட்ட வழக்கு C.P.(MD) No.756/2010 in MP NO.3 of 2013 Writ petion (MD) NO.4606 of 2013 இறுதி தீர்ப்பில் அன்னார் நீண்ட நாள் மதுரை மாநகராட்சியில் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வரும் காரணத்தினால் அன்னார்களின் மனுவை பரிசீலனை செய்து உரிய உத்தரவு வழங்க அரசுக்கு தெரிவிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை கிளை) தீர்ப்பின் அடிப்படையில் 9 செவிலியர்கள் கோரிக்கை மனு பரிசீலனை செய்யப்பட்டது. மதுரை மாநகராட்சி பணிவிதிகளின்படி செவிலியர் பணியிடம் தொகுதி 2 வகுப்பு 3–ல் உள்ளதால் நியமனக்குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மதுரை மாநகராட்சி நியமனக்குழு கூட்டம் 18.07.2013 யில் நடைபெற்றது. மேற்படி நியமனக்குழு கூட்டத்தில் 9 செவிலியர்கள் கடந்த 7 ஆண்டுகள் மதுரை மாநகராட்சியில் தொடர்ந்து தொகுப்பூதியத்தில் பணியாற்றி வருவதாலும் அன்னார்களின் பணி பொது சுகாதாரத் துறையில் இருப்பதால் அத்தியாவசிய பணியாக இருப்பதால் அன்னார்களை மதுரை மாநகராட்சியில் காலியாக உள்ள செவிலியர் பணியிடத்தில் நியமனம் செய்யவும், சம்பள விகிதம் 5200-20200 GP 2500 சம்பள விகிதம் வழங்கவும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற விதியை தளர்வு செய்து பின்னேற்பு அரசிடம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பணி நியமனம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டது (நியமனக்குழு தீர்மானம் எண்.22 நாள்:17.10.2013)

நியமனக்குழுவின் பரிந்துரை அடிப்படையில் மதுரை மாநகராட்சியில் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த 9 செவிலியர்களை மதுரை மாநகராட்சியில் காலியாக உள்ள செவிலியர்கள் காலி பணியிடத்தில் நியமனம் செய்யவும் சம்பள விகிதம் 5200-20200 GP 2500 சம்பள விகிதம் வழங்கவும், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற விதியை தளர்வு செய்து பின்னேற்பு அரசிடம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பணி நியமனம் செய்ய அரசு உத்தரவு பெற்று தர நகராட்சிகள் நிர்வாக ஆணையாளர் மூலம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை செயலாளர்

அவர்களுக்கு இவ்வலுவலக ம.நி10/மநி1/274599/2007 நாள் 06.02.2014-ன் படி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

சென்னை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை முதன்மை செயலாளர் அவர்களின் கடிதம் எண்(D) No.222/MC-4/2013 நாள்: 05.06.2014-யின்படி மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் மநி1/274599/2007 நாள்:06.02.2014 பரிந்துரை கடிதம் அரசு முழுமையாக பரிசிலனை செய்ததாகவும் ஆணையாளர் அவர்களின் பரிந்துரை நிராகரிக்கப்பட்டது என்று தெரிவித்து கடிதம் வரப் பெற்றுள்ளது.

சென்னை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை முதன்மை செயலாளர் அவர்களின் கடிதத்தின்படி மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தொகுப்பூதிய பணியிடத்தில் பணியாற்றி வந்த 9 செவிலியர்கள் உடன் மநி10/19295/2014 நாள்:26.06.2014-ம் தேதிய ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி பணியில் இருந்து விடுவிக்கப்பட்டார்கள்.

பணியில் இருந்து விடுவிக்கப்பட்ட செவிலியர்களில் சிலர் மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை கிளை)யில் வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்குகளை அரசு நிலைக்குழு வழக்கறிஞர் மூலம் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே மதுரை மாநகராட்சி நியமனக்குழு தீர்மானம் எண்.22 நாள்:17.10.2013-ன்படி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களை, அரசு நிராகரிக்கப்பட்டதால், மேற்கண்ட நியமனக்குழு தீர்மானத்தை ரத்து செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.683</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 31.07.2014**

**நாள்: 31.07.2014**

**<u>தீர்மானம் –1</u>**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நாட்டின் வருங்கால தூண்களான இளைய சமுதாயத்தின் சாதனையை உலகறிய செய்யும் வகையில் பல்வேறு திட்டங்களை வகுத்து குறிப்பாக இளைஞர்கள் பங்கேற்கும் விளையாட்டுத் துறைக்கு அளப்பரிய ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளித்து செயல்படுத்தி வருகிறார்கள். இதனையொட்டி கடந்த 2011 டிசம்பர் மாதம் நடைபெற்ற சட்டமன்றத்தில் ஒலிம்பிக்கில் தங்கம் பெறும் தமிழ்நாட்டை சேர்ந்த வீரர்களுக்கு 1 கோடியும், காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் தங்கம் பெறும் தமிழ்நாட்டை சேர்ந்த வீரர்களுக்கு ரூபாய் 50 லட்சமும் என்ற மகிழ்ச்சியான அறிவிப்பை அறிவித்தார்கள்.

அதன்படி ஸ்காட்லாந்து நாட்டில் கிளாஸ்கோ நகரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் 20–வது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில், இந்தியாவின் சார்பில் தமிழ்நாட்டை சேர்ந்த சதீஸ் சிவலிங்கம் என்பவர் 77 கிலோ பளுதூக்கும் எடைப்பிரிவில் தங்கப்பதக்கம் பெற்றமைக்கு தாயுள்ளத்தோடு தமிழ்நாட்டு விளையாட்டு துறையை ஊக்குவிக்கும் பொருட்டு சதீஸ் சிவலிங்கம் என்ற விளையாட்டு வீரருக்கு ரூபாய் 50 லட்சம் நிதியுதவி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் புரட்சிதலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.639</u>**

**<u>தீர்மானம் – 2</u>**

தமிழக மக்களின் காவல் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு புரட்சிதலைவி அம்மா அவர்கள், மதுரை உட்பட ஐந்து மாவட்ட மக்களின் ஜீவாதார பிரச்சனையான முல்லை பெரியாறு அணை பிரச்சனையில், 2002–ம் ஆண்டு முதல் மாபெரும் சட்டபோரட்டம் நடத்தி, அதன் மூலம் 7.5.2014 அன்று உச்சநீதிமன்றத்தில், முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்ற வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பினை பெற்றுத்தந்து, தொடர்ந்து 3.6.2014 அன்று பாரதப் பிரதமரை நேரில் சந்தித்து, உச்சநீதிமன்றத் தீர்ப்பினை நடைமுறைப்படுத்திகின்ற வகையில் மூவர் குழுவை அமைக்க வலியுறுத்தி, அதனை தொடர்ந்து 8.7.2014 அன்று மூவர் குழு அமைக்கப்பட்டு, அதன் மூலம் 136 அடியிலிருந்து 142 அடியாக அணை நீர்மட்டம் உயர்த்தி, கடந்த 37 ஆண்டுகளாக தீர்க்க முடியாத, தமிழக ஜீவாதார பிரச்சனையை தீர்த்து வைத்து, இதன் மூலம் தென்மாவட்ட மக்களுக்கு மாபெரும் நீதியினை பெற்றுத்தந்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சிதலைவி அம்மா அவர்களுக்கு, இம்மாமன்ற கூட்டம் மதுரை மாவட்ட மக்களின் சார்பில், பெற்பாதம் பணிந்து கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.640</u>**

**<u>தீர்மானம் – 3</u>**

வரலாற்று தொன்மைமிக்க முச்சங்கம் அமைத்து, முத்தமிழ் வளர்த்த மூவா புகழ் மதுரைக்கு, சட்டமன்றத்தில் 110 விதியின்கீழ் மதுரை மாநகராட்சி பகுதிகளான, மீனாட்சி மிஷன் மருத்துவமனையிலிருந்து கப்பலூர் வரை உள்ள 27 கிலோ மீட்டர் உள்வட்ட சாலையை (ரிங் ரோடு) 4 வழி சாலையாக அமைக்க ரூபாய் 200 கோடியை ஒதுக்கீடு செய்து, தொடர்ந்து தென்னகத்தின் ஏதேன்ஸ் மாமதுரைக்கு நிதியினை அள்ளி அள்ளி தரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு, இம்மாமன்ற கூட்டம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.641</u>**

**<u>தீர்மானம் – 4</u>**

மக்களால் நான், மக்களுக்காக நான் என்று தமிழக மக்களுக்காக, கடந்த 3 ஆண்டுகளாக பல்வேறு வரலாற்று திட்டங்களை வாரி வழங்கியது மட்டுமல்லாது, சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து, அதன் மூலம் தமிழக மக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்தி வரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சிதலைவி அம்மா அவர்களின் புனித மக்கள் பணியினை பெறுத்துக்கொள்ள முடியாத தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள், கண்ணியமிக்க சபையாக விளங்கும் சட்டமன்றத்தில், மக்கள் பணியாற்றாமல், மாறாக ஜனநாயகத்தை பாடுபடுத்தும் வகையில், பல்வேறு மக்கள் விரோத செயல்களில் ஈடுபட்டு வரும், தமிழக மக்களின் பெது ஜன விரோதி, எதிர் கட்சியாக இருக்க தகுதியற்ற, பண்பாட்டை காப்பாற்ற தெரியாத கருணாநிதியையும், கருணாநிதி மகன் ஸ்டாலினையும் மற்றும் தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்களையும் இம்மாமன்ற கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.642</u>**

**<u>தீர்மானம் – 5</u>**

தமிழக ஜீவாதார உரிமையான காவேரி, முல்லை பெரியாறு பிரச்சனையில், தன்னந்தனியாக போராடி, தமிழகத்தில் இழந்த உரிமையை நிலைநாட்டிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சிதலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றக் கூட்டம் கோடான கோடி நன்றியினை தெரிவிப்பதோடு, ஐந்து முறை ஆண்ட கருணாநிதி தமிழக மக்கள் ஜீவாதார பிரச்சனைக்கு, தன் குடும்ப சுயலாபத்திற்காக வாய்மூடி மௌனியாக இருந்துவிட்டு, தற்போது இந்த வெற்றியை எனக்கு பங்கு உண்டு என்று பெய்யான செய்திகயை பரப்பி வரும், இரட்டை நாக்கு உள்ள கருணாநிதியை இம்மாமன்ற கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.643</u>**

**<u>தீர்மானம் – 6</u>**

தமிழர்களின் கலாச்சாரத்தை அவமதிக்கும் வகையில், சென்னை சேப்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்றத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி அணிவித்து சென்ற , உயர்நீதி மன்ற நீதியரசர் உயர்திரு. டி. அரிபரந்தாமன் அவர்களை கலந்துகொள்ள அனுமதி மறுத்ததை கண்டு, மாண்புமிகு புரட்சிதலைவி அம்மா அவர்கள், தமிழத்தின் நாகரீகம், பண்பாட்டை இழிவுபடுத்தும் வகையில் தடைவிதிக்கும் சங்கங்களுக்கு, அதன் உரிமம் ரத்து செய்யப்படும் என்று, 16.07.2014 அன்று சட்டமன்றத்தில் வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றியும், நடப்பாண்டில் இளங்கோவடிகளின் புதிய காப்பியம் படைப்பவருக்கு அல்லது சிலப்பதிகாரத்தின் புகழ் பரப்புவருக்கு, ஆண்டுதோறும் சித்திரை திங்கள் சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகளின் பெயரில் புதிய விருதுகள் வழங்கப்படும் என்றும், இதற்காக ஒரு இலட்சம் ரூபாயும், தங்கபதக்கமும் வழங்கப்படும் என்று தாயுள்ளத்தோடு சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் அறிவித்து, இதனை தொடர்ந்து தமிழர்களின் கலாச்சாரத்தையும், தமிழ் மொழிக்கும், தமிழ் மண்ணுக்கும், தமிழ் இனத்திற்கும் பாதுகாப்பு அரணாக விளங்கி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சிதலைவி அம்மா அவர்களுக்கு, இம்மாமன்றக் கூட்டம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.644</u>**